விலை: 60.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
## சங்குநாதம்




சங்கு 23
ஒலி 189 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 12 ஞாயிற்றுக்கிழமை (26.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## திங்கள் முதல் பாடசாலை செல்லமாட்டோம்
### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிற்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)


நாளை திங்கள் முதல் பாடசாலைக்குச் செல்லமாட்டோம் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிற்கு அறிவித்துள்ளது.

அது தொடர்பான அறிவிப்பை ஊடக வாயிலாக நேற்று அறிவித்தார் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா புவனேஸ்வரன்.

குறித்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மதிப்பிற்கு உரித்தான அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அனைவருக்கும், திங்கள் முதல் 23

## கொடுப்பனவுகள் செலுத்த முடியவில்லை
## சில நாட்களுக்கு எரிபொருளுக்காக வரிசையில் நிற்கவேண்டாம்
### எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

அடுத்த சில நாட்களுக்கு எரிபொருளுக்காக வரிசையில் நிற்கவேண்டாம் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

டுவிட்டர் பதிவு ஒன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ள அவர், எரிபொருள் வருகை தாமதம் மற்றும் அதற்கான காரணங்களையும் விளக்கியுள்ளார்.

பெற்றோல், டீசல் 23

# பொருளாதாரத்தை மீட்பது தொடர்பில்

## அமெரிக்க ஜனாதிபதியுடன் இலங்கை தூதுவர் பேச்சு

(வொஷிங்டன்)

கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன் இலங்கைக்கான தூதுவர் மகிந்த சமரசிங்க நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.



(23 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் விநியோகம் முற்றாக நிறுத்தம்

(கொழும்பு)

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோல் விநியோகம் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபன உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் மாலையுடன் 92 ஒக்டேன் பெற்றோல் விநியோகம் முற்றாக 23

## சர்வதேச உதவி அரசிற்கு கிடைக்காது
### ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

சர்வதேசத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் தற்போதைய 23

திருச்சி முகாமில்
## 30 இலங்கையர்கள் உயிர் மாய்க்க முயற்சி

(05 ஆம் பக்கம் பார்க்க)

அரிசி, சீனி, பால்மா உட்பட 10
## அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதிக்கு அனுமதி

(19 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்., கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையங்கள்
### அத்தியாவசிய தேவைக்கு ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், யாழ்ப்பாணம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொதுமக்கள் காத்திருக்க வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இரண்டு எரிபொருள் 23

ராஜ் ஜுவல்லர்ஸ்
அடகு பிடிப்பவர்கள்
Best Choice
1 பவுண் 22 கரட்டிற்கு
140,000/=

(11747)
1 வருட கால அவகாசம்
உங்களுக்கு நாங்கள் தருகின்றோம்.
இல. 31C, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (சந்தைக்கு அருகில்)
Tel : 021 221 7287 / 076 636 1238

## சீரழிந்துள்ள தாயகத்தை கட்டியெழுப்புவோம்
### ஜே.வி.பி. தலைவர் அநுர தலைமையில் யாழில் மாநாடு; கூட்டமைப்பும் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

சீரழிந்துள்ள தாயகத்தை கட்டியெழுப்புவோம் என்ற தொனிப் பொருளில் ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திசாநாயக்க தலைமையில் யாழில் நேற்று மாநாடு ஒன்று இடம்பெற்றது.

குறித்த மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்.பல்கலை மருத்துவ பீடத்துக்கு மூன்று பேராசிரியர்கள் நியமனம்





(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மூன்று துறைகளுக்கு மூன்று பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான அங்கீகாரத்தைப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று வழங்கியது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற பேரவைக் கூட்டத்திலேயே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.

மருத்துவ நிபுணரான பேராசிரியர் தி.குமணனை மருத்துவத் துறைப் பேராசிரியராகவும் குழந்தை வைத்தியத் துறையில் பேராசிரியரும் குழந்தை வைத்திய நிபுணருமான பேராசிரியர் திருமதி கீதாஞ்சலி சத்தியதாஸை குழந்தை வைத்தியத் துறைப் பேராசிரியராகவும் சமுதாய மருத்துவத் துறையில் பேராசிரியரும் சமுதாய வைத்திய நிபுணருமான பேராசிரியர் குமரேந்திரனை சமுதாய மருத்துவத் துறைப் பேராசிரியராகவும், அந்தந்தத் துறைகளுக்கான இருக்கைப் பேராசிரியர்களாகவும் நியமிப்பதற்கு தெரிவுக் குழுவின் பரிந்துரையைப் பரிசீலனை செய்த பேரவை அதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. (ம-7,18,33)

# யாழ்.பல்கலைக்கழக ஊடகத்துறை தலைவர்

## பேராசிரியராக பதவி உயர்வு



(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சி.ரகுராம் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதற்கான ஒப்புதலை பல்கலைக்கழகப் பேரவை நேற்று வழங்கியது. பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும் கலைப் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சி.ரகுராம் ஊடகக் கற்கைகளில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ம-7,18,33)

# வடக்கு - கிழக்கை கேட்காமல் முழு நாட்டையும் முன்னேற்ற வாருங்கள்

## புலம்பெயர் தமிழ் மக்களுக்கு சம்பிக்க ரணவக்க பகிரங்க அழைப்பு



(கொழும்பு)

வடக்கு - கிழக்கை எமக்கு தாருங்கள் நாங்கள் செய்து காட்டுகிறோம் என்று கூறாமல் வட, கிழக்கு உள்ளிட்ட முழு நாட்டையும் புலம்பெயர் தமிழர்கள் முன்னேற்றச் செய்யலாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கிய நேர்காணல் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை நாட்டு மக்கள் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். அவர்களில் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவான ஒரு சிறு பகுதியினர் இருக்கலாம். எனினும் அவர்கள் வந்து இலங்கையில் முதலீடு செய்ய முடியும்.

வடக்கு- கிழக்கை எமக்கு தாருங்கள் நாங்கள் செய்து காட்டுகிறோம் என்று கூறாமல் வட, கிழக்கு உள்ளிட்ட முழு நாட்டையும் புலம்பெயர் தமிழர்கள் முன்னேற்றச் செய்யலாம்.

எனது காலத்திலேயே யாழ்ப்பாணத்திற்கு முழுமையாக மின்சாரம் வழங்கப்பட்டது. எனது காலத்தில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் மின் உற்பத்தி நிலையம் உருவாக்கப்பட்டது.

சுன்னாகத்தில் இருந்து வவுனியாவுக்கு ஒரு தொகுதியை அமைத்தோம். முல்லைத்தீவு, மன்னார் போன்ற பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கினோம்.

பிரபாகரன் உயிரிழந்த பின்னர் மூன்று மாதங்களில் புது மாத்தளன் பகுதிக்கு மின்சாரம் வழங்கினோம்.

தற்போதுள்ள பிரச்சினை டொலர் இன்மையால் டீசலை இறக்குமதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டதாகும். அதனால் டீசலில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம் போதுமானதாக இல்லை. எனவே நாம் தற்போது புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்திக்கு செல்ல வேண்டும்.

இலங்கையில் மிக அதிகமாக புதுப்பிக்கத்தக்க மின்சார ஆற்றல் காங்கேசன்துறை, பூநகரி, மன்னார் ஆகியபகுதிகளில்காணப்படுகிறது. சூரியஒளியில் மின்சாரம் உற்பத்தி திட்டத்தை நானே கொண்டு வந்தேன்.

அதனை இலங்கை முழுவதும் கொண்டு செல்ல வேண்டும் என்பதே எனது நோக்கமாக இருக்கிறது என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# எரிபொருள் நிரப்பு நிலையம் அருகே வாள்வெட்டு

## 4 பேர் காயம்

(கொழும்பு)

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் வாள்வெட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த வாள்வெட்டு சம்பவத்தில் காயமடைந்த 4 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது

இந்தச் சம்பவம் வெல்லவாய எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது

வாள்வெட்டுக்காயங்களுக்கு இலக்கான நால்வரே வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும், சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் ஒருவர் மொனராகலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-7)


## கணித, விஞ்ஞான வகுப்புகள்

தரம் 10, 11 மாணவர்களுக்கான கணிதம் மற்றும் விஞ்ஞான வகுப்புகள் (தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலமாக) தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.

(11979)

076 696 9679


சத்திரசிகிச்சை கூடத்தில்

## பிரதேச செயலரை அடைத்த வைத்தியசாலை ஊழியர்கள்

(மாத்தறை)

சுகயீனம் காரணமாக மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாத்தறை பிரதேச செயலர் கௌசல்யா குமாரி வைத்தியசாலையின் ஊழியர்களினால் சத்திர சிகிச்சைக் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தமக்கு போதிய எரிபொருள் வழங்கப்படவில்லை எனக் கூறி பொது வைத்தியசாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது சிகிச்சை பெற்று வந்த பிரதேச செயலரை சுமார் ஒரு மணித்தியாலம் சத்திர சிகிச்சை கூடத்தில் அடைத்து வைத்தனர்.

இந்த சம்பவத்தையடுத்து பொலிஸார் வருகை தந்து பிரதேச செயலரை மீட்டு வைத்தியசாலையில் இருந்து வெளியே அழைத்து வந்தனர். (ம-7)

# மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 06 . 1933



இறப்பு 24 . 06 . 2022

## திருமதி சரஸ்வதி சிவசுப்பிரமணியம்

பழைய உடையார் ஒழுங்கை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிவசுப்பிரமணியம் அவர்கள் 24.06.2022 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.06.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழைய உடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(11990)

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே:- 077 953 3817 (Whatsapp)


## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

- பகல், இரவுக் கடமை
- ஆண்கள்

யாழ். நகரை அண்மித்தவர்களுக்கு முன்னுரிமை.

076 097 3121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் புகழ் பெற்ற திருக்கேதீச்சரம்

காலம் வரையறுக்க முடியாத அளவுக்கு தொன்மை வாய்ந்த ஆலயம் திருக்கேதீச்சரம். இத்திருத்தலத்தில் 06.07.2022 அன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. ஈழத் திருநாட்டில் பஞ்ச ஈஸ்வர தலங்களில் மிகத் தொன்மை வாய்ந்த தலமாக இத்தலம் விளங்குகிறது. நவக்கிரகங்களில் ஒன்றாகிய கேது மண்ணை நோக்கி வந்து மாதோட்டத்தில் வழிபாடு செய்த காரணத்தால் இத்தலம் கேதீச்சரம் என அழைக்கப்படலாயிற்று. ஞானசம்பந்தர் "தொண்டர் நாள்தோறும் துதிசெய்ய அருள்செய்யும் கேதீச்சரம்" என குறிப்பிட்டுள்ளார். திருத்தொண்டர்களால் நிறைந்த கேதீச்சரம் தமிழ் வேந்தர் காலத்தில் பெருங்கோயிலாக விளங்கியது.

நீண்ட வரலாறு கொண்ட கேதீச்சரத்தையும், பாவம் கழுவும் பாலாவியையும் இந்தியாவில் இருந்து தரிசிப்பதற்காக வந்தவர்கள் பலர். மகாபாரதம், இராமாயணம் பேசப்பட்ட காலத்திலேயே காப்பியர் காலத்து மன்னர்கள் பலர் தம் நேர்த்திகளை நிறைவேற்றுவதற்கு மாதோட்டத்திற்கு வந்தனர். இந்திய மன்னர்கள் இந்த ஆலயத் திருப்பணியில் கண்ணும் கருத்தும் கருதிச் செயற்பட்டனர். அந்நியர் ஆட்சியில் அடியோடு தகர்க்கப்பட்ட ஆலயத்தின் பாதிப்பு என்பது இன்று வரை ஈடுகொடுக்க முடியாதுள்ளது.

இவ்வாலயத் திருப்பணி தொடர்பாக நல்லைநகர் நாவலர் பெருமான் எடுத்த முயற்சி பெரும்பயன் தந்தது. நாவலருக்குப் பின் திருக்கேதீச்சரத் திருப்பணியில் பசுபதிச் செட்டியார் போன்ற பெரியவர்கள் அயராது உழைத்தனர். இலங்கை சிவில் சேவையில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி பின் இலங்கை சட்ட சபையில் அமைச்சராக விளங்கி, அவற்றில் இருந்து விடுபட்டு கேதீச்சரப் பெருமானுக்கு மீளா அடியவராக தன்னை அர்ப்பணித்தவர் சேர்.கந்தையா வைத்தியநாதன் அவர்கள். எனது தந்தைவழிப் பேரனாகிய இவர் கோப்பாயை பிறப்பிடமாகக் கொண்டவர். அப்பெரியார் சிறியேனின் இரத்த உறவு என்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன். அவர் அடர்ந்த காட்டுக்குள் குடிசை அமைத்து இரவு பகலாக ஆலயத் திருப்பணியில் அக்கறை காட்டினார். அவரைத் தொடர்ந்து சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் மற்றும் அதிபர் மு.ஞானப்பிரகாசம் போன்றவர்கள் அக்கறை செலுத்தினர். ஆலயத் திருப்பணிச் சபை கொழும்பில் உள்ள கல்வியாளர்களையும் தனவந்தர்களையும் உள்ளடக்கியதாக எழுச்சிபெற்றது. வழக்கறிஞர் பெரியார் நமசிவாயம் தலைமையில் பலர் இணைந்து சீரிய பணிகள் ஆற்றினர்.

திருக்கேதீச்சரப் பெருமானுக்கு பஞ்சரதம் பவனிவரும் சிறப்பும், சிவராத்திரிப் பெருமையும் சொல்லில் வடிக்கமுடியாது. இவ்வாலயத் திருப்பணியில் பலர் ஈடுபட்டபோதிலும் அமரர் வி.கயிலாசபிள்ளை, அமரர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் போருக்குப்பின் ஆலயத்தை மீளவும் கட்டியெழுப்புவதில் அயராது உழைத்தனர். ஆலயத்தை முழுமையாக உள்வீதி முழுவதும் கருங்கற்களால் அமைக்கவேண்டும் என்ற பலநாள் கனவு தற்போது நனவாகியுள்ளது. இம்முயற்சியில் உன்னத பங்காற்றியவர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள். திருக்கேதீச்சரத்தை கருங்கற்களால் கட்டித்தரும்படி இந்தியத் தூதுவராலயம் ஊடாக இந்திய அரசுக்கு இவர்கள் வேண்டுதல் விடுத்தனர். அம்முயற்சி வெற்றியடைவதற்காக பல்வேறு வழிகளைக் கையாண்டனர். கேதீச்சரப் பெருமானின் திருவருளால் இந்திய அரசாங்கம் கோடிக்கணக்கான பணத்தைச் செலவுசெய்து பிரதானமான மண்டபங்களை கருங்கற்களால் கட்டிமுடித்துள்ளது.

மேலும் ஆலயத்தின் மூலஸ்தானம் ஏற்கனவே கருங்கல்லால் கட்டப்பட்ட போதிலும் விமானத்தை முற்றாக கருங்கல்லால் கட்டும் முயற்சி இன்று கைகூடியுள்ளது. விமானக் கட்டுமானப் பணி தொடங்கும்போது அடியேனும் ஆறு.திருமுருகன் அவர்களும் திரு. திருமதி.கயிலாசபிள்ளை அவர்களின் சார்பில் கல்லு வைத்து தொடக்கிவைத்தோம். தற்போது சுற்றுப் பிரகார கோயில்கள் முழுவதும் அன்பர்கள் உதவியால் கருங்கற் கோயிலாக காட்சியளிக்கிறது. இது தெய்வத் திருவருள். எமக்கு முன் வாழ்ந்த பெரியோர்கள் காட்டிய வழியை நாமும் பின்பற்ற வேண்டும். திருக்கேதீச்சரத்தின் சுற்றாடல் இந்தியத் திருத்தலங்களுக்கு ஈடாக மேலும் விரிவடைய வேண்டும். இந்துக் கலாசாரங்களை பிரதிபலிக்கும் கலாசாலைகள் சுற்றாடலில் உருவாக வேண்டும். இப்பாரிய திருப்பணியில் ஈடுபட்ட அனைவரையும் வாழ்த்தி வணங்குகிறேன்.

*- ரிஷி தொண்டுநாத சுவாமிகள்*

## திருக்கேதீச்சரம் மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு, கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் அகில இலங்கை ரீதியாக நடாத்தும் சைவ சமய அறிவுப் போட்டி- 2022



### போட்டியில் பங்கு பற்றி சரியான விடை எழுதும் அதிஷ்டசாலி மாணவர்களுக்கு

**முதற் பரிசு - ரூபா 25,000**
**இரண்டாம் பரிசு - ரூபா 15,000**
**மூன்றாம் பரிசு - ரூபா 10,000**

**மேலும் 25 மாணவர்களுக்கு தலா ரூபா 1000 வீதம் பரிசில் வழங்கப்படும்.**

1. திருக்கேதீச்சரம் தொடர்பாக "தேன் பொந்துதொன்று அகப்பட்டுள்ளது அதனை மீட்டெடுக்க எல்லோரும் புறப்படுங்கள்" என பிரசுரம் வெளியிட்டவர் யார்?
2. கோப்பாயை பிறப்பிடமாக கொண்டவரும்,திருக்கேதீச்சர திருப்பணியில் பங்குபற்றியவரும், பிரித்தானிய மகாராணியால் உயர்விருது வழங்கி கௌரவம் பெற்றவருமாகிய சைவப் பெரியார் பெயர் என்ன?
3. திருக்கேதீச்சர திருப்பணியில் இலங்கை இந்திய அரசோடு ஒப்பந்தம் செய்த திருக்கேதீச்சர திருப்பணிச்சபை தலைவரின் பெயர் என்ன?
4. கீரிமலை நகுலேஸ்வர ஆலய தீர்த்தத்தின் பெயர் என்ன?
5. திருக்கோணேச்சர ஆலய தீர்த்தத்தின் பெயர் என்ன?
6. முன்னேஸ்வரப்பெருமானின் சக்திக்குப் பெயர் யாது?
7. கதிர்காமத்தின் மீது பாடப்பட்ட திருப்புகழின் முதல் அடி யாது?
8. நல்லூர் கந்தசுவாமி கோவில் அறங்காவலர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் சிவபதம் அடைந்த நாள் எது?
9. நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் இந்தியாவில் உள்ள எந்த ஆதீனத்தின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.?
10. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சிவபூமி திருவாசக அரண்மனையின் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் சிவமுகூர்த்தம் யாது?
11. செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தை ஆரம்பித்த அடியவர் பெயர் என்ன?
12. யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என எடுத்துரைத்த பெரியார் யார்?
13. சிவபாலயோகியால் மலையகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ லங்காதீஸ்வரர் கோவில் எந்த நகரில் உள்ளது?
14. யாழ்.கந்தர்மடம் வேதாந்த மடத்தின் நான்காவது குருமுதல்வர் தவத்திரு மகாதேவ சுவாமிகள் சமாதியடைந்த ஆண்டு என்ன?
15. ஈழத்து சித்தர் கடையிற் சுவாமிகளின் தீட்சாநாமம் என்ன?
16. 'ஒரு பொல்லாப்பும் இல்லை, எப்பவோ முடிந்த காரியம் , முழுவதும் உண்மை யாம் அறியோம்'என்ற மகா வாக்கியங்களை அருளியவர் யார்?
17. யாழ்ப்பாணத்து யோகசுவாமிகள் சமாதி கூடிய நட்சத்திரம் யாது?
18. யோகசுவாமிகளின் போதனைகள் அடங்கிய நூலின் பெயர் யாது?
19. அமெரிக்கா ஹவாய் ஆதீன ஸ்தாபகரும் யோக சுவாமிகளின் சீடருமாகிய சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் ஸ்தாபித்து சர்வதேச ரீதியில் வெளிவரும் இந்து சமய ஆங்கில சஞ்சிகையின் பெயர் யாது?
20. சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோவில் சர்வமத பாராளுமன்றத்தில் எந்த ஆண்டு உரையாற்றினார்?
21. திருச்செந்தூர் புராணத்து ஏடுகளைக் காப்பாற்றிய கிழக்கு இலங்கை முருகத் தலம் எது?
22. இலங்கையை ஆண்ட இறுதி தேசாதிபதியின் மகன் யோகர் சுவாமிகளின் சீடராகி துறவு வாழ்க்கை வாழ்ந்தார்.அவரின் தீட்சா நாமம் என்ன?
23. உலகப் பெருமஞ்சம் ஓடுகின்ற திருக்கோவில் யாது?
24. தொடர்ந்து நூற்று ஐம்பது ஆண்டுகளாக வெளிவரும் ஈழத்து இந்து சமயப் பத்திரிகை யாது?
25. சுவாமி விபுலானந்தர் யாழ்ப்பாணத்தில் அதிபராகப் பணியாற்றிய கல்லூரியின் பெயர் என்ன?

**மேற்கூறிய வினாக்களுக்குரிய விடைகளை வேறொரு தாளில் இலக்கமிட்டு எழுதவும்.**
*10 வயது முதல் 19 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும்.*

**கீழ்வரும் விபரங்களை விடைத்தாளுடன் இணைக்கவும்.**

- முழுப்பெயர்
- முகவரி
- தொலைபேசி இலக்கம்
- பாடசாலையின் பெயர், தரம்
- பிறந்த ஆண்டு
- பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது ஆசிரியரின் கையொப்பம்

(11941)

**விடைகளை கீழ் வரும் முகவரிக்கு 10.07.2022 ற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.**
**ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்,பழைய வீதி,கோப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போட்டியை வென்றது ஆஸி. கிண்ணத்தை கைப்பற்றியது இலங்கை



அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கொழும்பு ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 5ஆவதும் கடைசியுமான சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா "இரட்டை" வெற்றியை ஈட்டியது. போட்டியில் 4 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா, அரங்கில் மஞ்சள் ஆடைகளுடன் குழுமியிருந்த ரசிகர்களின் மனங்களையும் வெற்றி கொண்டு "இரட்டை" வெற்றியைப் பூர்த்தி செய்தது.

இப் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றதும் அரங்கில் ஒஸ்ட்ரேலியா, ஒஸ்ட்ரேலியா என்ற குரல்கள் ஓங்கி ஒலித்ததுடன் ஆரவாரத்துடன் கரகோஷமும் எழுப்பப்பட்டது.

பதிலுக்கு அவுஸ்திரேலிய அணியின் ஒரு பகுதியினர் அரங்கை சுற்றிவந்து கைகளை அசைத்து ரசிகர்களுக்கு நன்றி கூறினர். அது மட்டுமல்லாமல் நாட்டில் நிலவும் நெருக்கடிக்கு மத்தியிலும் இலங்கைக்கு வருகை தந்த முழு அளவிலான அவுஸ்திரேலிய அணிக்கு நன்றி பாராட்டும் வகையில் அரங்குக்கு வெளியே பட்டாசுகள் வெடிக்க வைக்கப்பட்டன.

இந்தப் போட்டி முடிவுடன் 5 போட்டிகள் கொண்ட தொடரை 3 - 2 என்ற ஆட்டங்கள் அடிப்படையில் இலங்கை கைப்பற்றியது. எவ்வாறாயினும் 4 ஆவது போட்டி முடிவுடன் தொடரை இலங்கை தனதாக்கிக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப் போட்டியில் இலங்கையினால் நிர்ணயிக்கப்பட்ட 161 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 39.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. (4)

## அதிக சிக்ஸர்கள்

# டோனியின் சாதனையை முறியடித்த பட்லர்



இங்கிலாந்தின் அதிரடி துடுப்பாட்ட வீரர் ஜோஸ் பட்லர் ஒரு தொடரில் அதிக சிக்ஸர்கள் விளாசிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

நெதர்லாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை இங்கிலாந்து அணி முழுவதுமாக வென்றது.

கடைசிப் போட்டியில் மிரட்டிய இங்கிலாந்து வீரர் ஜோஸ் பட்லர், 64 பந்துகளில் 5 சிக்ஸர், 7 பவுண்டரிகளுடன் 86 ஓட்டங்கள் விளாசினார்.

இரண்டாவது ஒருநாள் போட்டியில் களமிறங்காத பட்லர், முதல் போட்டியில் 14 சிக்ஸர்கள் விளாசியிருந்தார். இதன்மூலம் அவர் ஒரு தொடரில் 19 சிக்ஸர்கள் விளாசியுள்ளார்.

இதற்கு முன்பு 2005ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான தொடரில், இந்திய அணியின் முன்னாள் கப்டன் தோனி 17 சிக்ஸர்கள் விளாசியிருந்ததே சாதனையாக இருந்த நிலையில், தற்போது பட்லர் அதனை முறியடித்துள்ளார். இந்த சாதனைப் பட்டியலில், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக 16 சிக்ஸர்கள் விளாசிய தென் ஆபிரிக்க வீரர் ஏ.பி.டி. வில்லியர்ஸ் மூன்றாவது இடத்தில் உள்ளார். (4)



இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒலிம்பிக் தினம் உலக அமைதிக்கான ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் கடந்த 23 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. பகிர்வு, நட்புறவு, முயற்சியில் வெற்றி, எப்போதும் அதிசிறந்தவற்றை செய்தல் ஆகிய அம்சங்களையும் இந்த ஒலிம்பிக் தினம் எடுத்துக்காட்டியது. மிக எளிமையாகவும் அமைதியின் தேவையை உலகுக்கு ஆணித்தரமாக வலியுறுத்தும் வகையில் குறித்த ஒலிம்பிக் தினம் கொண்டாடப்பட்டது.

# 2 வருடங்களுக்கு பின் களமிறங்கிய முரளி விஜய்



திருநெல்வேலியில் நடைபெற்று வரும் தமிழ்நாடு பிரீமியர் லீக்கில் திருச்சி வாரியர்ஸ் அணிக்காக முரளி விஜய் விளையாடுகின்றார்.

இரண்டு வருட இடைவெளிக்குப் பின் திண்டுக்கல் அணிக்கு எதிரான நேற்று முன் தினம் போட்டியில் களமிறங்கிய அவர் 13 பந்துகளில் 8 ரன்னில் ரன் அவுட் மூலம் ஆட்டமிழந்தார். 38 வயதான முரளி விஜய் முடிந்தவரை விளையாட விரும்புவதாகவும் சொந்த காரணங்களுக்காக ஓய்வு எடுத்ததாகவும் தெரிவித்தார்.

இடைவெளிக்குப் பிறகு விளையாடிய முரளி விஜய் கூறியதாவது, எனக்கு ஒரு குடும்பம் உள்ளது.

அவர்களைக் கவனித்துக் கொள்ள விரும்பினேன். நான் இப்போது எனது கிரிக்கெட்டை ரசிக்கிறேன்.

மேலும் நான் நம்பிக்கையுடனும் விளையாடுவதற்கு உடல் தகுதியுடனும் இருப்பதாக உணர்கிறேன்.

எனது அணிக்காகவும் டீஎன்பிஎல் போட்டிக்காகவும் என்னால் முடிந்ததைச் செய்ய முடியும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (4)

# இந்தியா - அயர்லாந்து இன்று பலப்பரீட்சை



இந்திய கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப் பயணம் செய்து இரண்டு 20 ஓவர் போட்டிகளில் விளையாட திட்டமிட்டது. அதன்படி ஹர்திக் பாண்ட்யா தலைமையிலான இந்திய அணி அயர்லாந்து சென்றடைந்தது. இந்தியா - அயர்லாந்து அணிகள் மோதும் முதல் 20 ஓவர் போட்டி டப்ளினில் இன்று நடைபெறவுள்ளது. கப்டன் ரோகித் ஷர்மா, விராட் கோலி, ரிஷப்பண்ட், ஸ்ரேயாஸ் அய்யர் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இங்கிலாந்தில் விளையாட சென்று விட்டதால் அடுத்த கட்ட வீரர்கள் அயர்லாந்து போட்டியில் விளையாடுகிறார்கள். இதனால் ஹர்திக் பாண்ட்யா கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணியில், கப்டன் ஹர்திக் பாண்ட்யா, இஷான் கிஷன், சூர்யகுமார் யாதவ், தினேஷ் கார்த்திக், சஞ்சு சாம்சன், புவனேஷ்வர் குமார், சாஹல், அவேஷ்கான் உள்ளிட்ட சிறந்த வீரர்கள் உள்ளனர். வெற்றியுடன் கணக்கை தொடங்கும் ஆர்வத்தில் இந்திய அணி உள்ளது. பால்பரீன் தலைமையிலான அயர்லாந்து அணி இந்தியாவுக்கு எல்லா வகையிலும் சவால் கொடுத்து விளையாட கடுமையாக போராடும்: இரு அணிகள் இடையே நடந்த 3 ஆட்டத்திலும் இந்திய அணியே வெற்றி பெற்றுள்ளது.

2009 இல் நடந்த முதல் ஆட்டத்தில் 8 விக்கெட் வித்தியாசத்திலும் 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடந்த 2ஆவது போட்டியில் 76 ரன் வித்தியாசத்திலும், 3ஆவது ஆட்டத்தில் 143 ரன் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்பு

FRENCH வகுப்பு on-Line-(ZOOM) மூலம் போதிய கற்கை நெறிகள் வழங்கப்படும். சான்றிதழும் வழங்கப்படும். (சி-1741)

**077 4291 587**
**077 0723 584**


# எரிபொருள் வழங்கக்கோரி
## வீதியை மறித்து புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்



(புத்தளம்)

எரிபொருளைப் பெற்றுத்தருமாறு கோரி புத்தளம் கொழும்பு பிரதான வீதியை மறித்து தில்லையடி எரி பொருள் நிலையத்திற்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 6 நாட்களாக புத்தளம் தில்லையடி எரிபொருள் நிலையத்திற்கு எரிபொருள் வராத காரணத்தினால் எரிபொருளைப் பெறுவதற்கு காத்திருந்த மக்கள் ஆத்திரமடைந்து புத்தளம் கொழும்பு பிரதான வீதியை மறித்து தில்லையடி எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் போக்குவரத்து சுமார் அரை மணி நேரத்திற்கு ஸ்தம்பிதமடைந்தது.

புத்தளம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.(நி-6)


# ஓராண்டு நினைவஞ்சலி அழைப்பு



கடந்த வருடம் 07.07.2021 அன்று சிவபதமடைந்த எங்கள் குல விளக்கு

அமரர். **அருணாச்சலம் ஜெயகுணதிலகம்.**

ஆண்டு ஒன்று ஆனதையா
நீங்கள் எம்மை-விட்டுச் சென்று
நேற்றுப் போல் இருக்குதையா
உங்கள் நினைவுகள் தோற்றுப்போய்
நீங்கள் சென்ற தேசமதில் நிலையான
அமைதி கொள்ள இறைவனை வேண்டுகின்றோம்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் 26.06.2022 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (11961)

**1ம் வட்டாரம், மண்டைதீவு.** **குடும்பத்தினர்.**


### திருச்சி முகாமில்
# உயிரை மாய்க்க முயன்ற
## இலங்கைத் தமிழர்கள் மருத்துவமனையில்

(சென்னை)

திருச்சி மத்திய சிறை சிறப்பு முகாமில் இலங்கை தமிழர் ஒருவர் தீக்குளித்த நிலையில், அவருக்கு திருச்சி அரச மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் குற்ற வழக்குகளில் தொடர்பு உடைய இலங்கை, பங்களாதேஷ், ரஷ்யா, பல்கேரியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த அகதிகள் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கை தமிழர்கள் சிலர் சிறையில் அடைக்கப்பட்டு தண்டனைக் காலம் முடிந்து 3 ஆண்டுகளுக்கு மேல் ஆவதால், தங்களை விடுதலை செய்யக்கோரி கடந்த மே மாதம் 20 ஆம் திகதி முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சிறப்பு முகாமில் உள்ள இலங்கை தமிழர்கள் 30 பேர் மாத்திரை உட்கொண்டு



தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர்.

30 பேரையும் மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக பொலிஸார் அனுமதித்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் திருச்சி அகதிகள் முகாமில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.(நி-6)


## காணி விற்பனைக்கு

- தெல்லிப்பழை வறுத்தலைவிளானில் 5 பரப்பு காணி விற்பனைக்கு. மொத்த விலை-43,00,000/=
- வசாவிளானில் 20 பரப்பு காணி விற்பனைக்கு, காணி பிரித்து கொடுக்கப்படும்.தோட்டம் செய்ய வீடு கட்ட உகந்த காணி.

(11986)

**077 423 5458**
**075 262 7584**


# இராசிபலன்

26.06.2022
ஆனி 12, ஞாயிற்றுக்கிழமை
திரியோதசி பின்னிரவு 4.47 மணிவரை

கார்த்திகை பிற்பகல் 3.11 மணிவரை
சுபநேரம் 8.55-10.25 மணிவரை
இராகுகாலம் 4.25-5.55மணிவரை

பிரதோஷ விரதம்
சந்திராஷ்டமம் - சித்திரை,சுவாதி

**வளவன்**




சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைக்ளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வேலைச் சுமை கூடும், பிரயாண பயமுண்டு.




பிள்ளைகளின் நீண்ட நாளைய விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.




உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு




வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சுப தகவல்கள் இல்லம் வந்துசேரலாம். மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.




எடுத்த காரியத்தை முடிக்க ஒருமுறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காணவேண்டிய நாள்.




பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்தடைவர், செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும் நாள், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.




பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்குள் மூழ்கி உன் சிந்தனைக்குச் சமாதி கட்டி விடாதே.

# அரசால் வழங்கப்படும் முன்னுரிமை சேவைகளுக்கு

# பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**கிளிநொச்சி சுகாதாரப் பணிப்பாளர் தாக்கப்பட்ட சம்பவம் வடமாகாண சுகாதாரப் பணியாளர்களை அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது. இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் சுகாதாரப்பணியாளர்களுக்கு என ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகத்தை ஒருங்கிணைப்பதற்காக அம்மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ந.சரவணபவன் ஈடுபட்டிருந்தார். அப்போது சில பொதுமக்கள் அங்கு வரிசையில் காத்திருந்த தாதிய உத்தியோகத்தர்கள் சிலரை நகர விடாமல் தடைகளை ஏற்படுத்தினர். இதன்போது சரவணபவன் அவர்களிடம் சென்று தாதிய உத்தியோகத்தர்களை முன்னோக்கி நகர அனுமதிக்குமாறு கேட்டபோது அதற்கு மறுத்து அவருடன் வாக்குவாதப்பட்டவர்களுள் ஒருவரால் அவர் தாக்கப்பட்டார்.


இந்தச் சம்பவம் வடமாகாணத்தின் சுகாதாரப் பணியாளர்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நாகரிகமற்ற, மனிதாபிமானமற்ற, செயலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். தாக்குதலுக்குள்ளான சரவணபவனை கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின் தற்போது வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். தாக்குதலை மேற்கொண்ட நபரும் பொலிஸாரினால் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த யுத்தகாலத்தில் ஏற்பட்ட தாக்குதல்கள், இடப்பெயர்வுகள் மத்தியிலும் பணியாற்றி பல்லாயிரம் உயிர்களைக் காப்பாற்றிய மற்றும் கொவிட் பெருந்தொற்று நேரத்தில் அனைவரும் வீடுகளில் முடங்கியிருக்க தமது உயிரைப் பணயம் வைத்து சுகாதார சேவைகளை வழங்கி பெருமளவு உயிர்களையும் காப்பாற்றி இன்று கொவிட்டை கட்டுப்பாட்டினுள் கொண்டுவர உழைத்த வடமாகாண சுகாதார ஊழியர்களுக்கு கடந்த சில நாட்களாகவும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் மூலம் ஏற்பட்ட அனுபவங்கள் மிகுந்த மனச்சோர்வையும் கவலையையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

சுகாதாரத்துறை மக்கள் அனைவரதும் உயிர்காக்கும் அத்தியாவசிய சேவை என்பதை புரிந்து கொண்டு எதிர்காலத்திலாவது சுகாதாரப்பணியாளர்கள் தடையின்றியும் தாமதமின்றியும் வேலைக்கு வருவதை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் முன்னுரிமைச் சேவைகளுக்கு இடையூறு செய்யாது பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவற்றுக்கு எதிராக குழப்பங்களை ஏற்படுத்துகின்ற சமூகவிரோதசக்திகளுக்கு எதிராக பொதுமக்கள் குரல் கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-6)

## போதைப்பொருள் தடுப்புச் செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

கிராம மட்டங்களில் சிகரெட், மதுசாரம் உட்பட ஏனைய போதைவஸ்துக்குச் செலவாகும் தொகையைக் குறைத்து தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு மக்களை வலுப்படுத்துதல் தொடர்பான செயலமர்வு கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

கிராம மட்டத்திலான போதைப்பொருள் தடுப்புச் செயற்றிட்டத்தின் முக்கியத்துவம், நிலைபேறான செயற்றிட்டத்தின் முக்கியத்துவம், கிராம மட்டங்களில் ஆரம்ப மதிப்பீடுகள் மேற்கொள்வதற்கான நுட்பங்கள், வழிமுறைகள், கிராம அபிவிருத்தியில் போதைப்பொருள் பாவனையின் ஆதிக்கம், கிராமியத் தகவல்களைத் திரட்டிக் கொள்ளல், ஆரம்பகட்டச் செயற்பாட்டினைத் திட்டமிடல் என்பன தொடர்பில் குறித்த செயலமர்வில் ஆராயப்பட்டது. (4-6-18)

## நுண்நிதி டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கான திசைப்படுத்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தினால் நடத்தப்படும் நுண்நிதி டிப்ளோமா கற்கை நெறியின் ஐந்தாம் அணி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு இன்று 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு, கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில், பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில்இடம்பெறவுள்ளது.

ஒரு வருடக் கற்கை நெறியான இந்தக் கற்கைநெறியில் வங்கித்துறையில் பணி புரியும் உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், நிதி நிறுவனங்களில் பணி புரிபவர்கள் என ஏறத்தாழ 100 இற்கும் மேற்பட்டவர்கள் பூர்த்தி செய்துள்ளனர். இக்கற்கை நெறியினை கற்பதன் மூலம் நுண்நிதி பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்வதோடு, இத்துறையில் வேலை செய்யும் உத்தியோகத்தரின் பதவி உயர்விற்கும் இக்கற்கை நெறி ஒரு படிக்கல்லாக அமையும் என்பது இக்கற்கை நெறியின் சிறப்பம்சம் ஆகும். (4-6)

## மஹோற்சவம்

(குப்பிழான்)

சுன்னாகம் மயிலணிக் கந்த சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்தும் பன்னிரெண்டு தினங்கள் நடைபெறும் இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும், 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் மாலை 5 மணிக்குத் திருவூஞ்சலைத் தொடர்ந்து கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும் என மேற்படி ஆலய அறங்காவலர் அறிவித்துள்ளார். (4-6-18)

x x x x x x x x x x

(குப்பிழான்)

ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகா உடனுறை அம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 4 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்குச் சப்பரத் திருவிழாவும், 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், அன்றைய தினம் இரவு 7 மணிக்கு கொடியிறக்க வைபவமும் நடைபெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-6-18)



உலக யோகா தினத்தை முன்னிட்டு, இலங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரியினால் மு/வித்தியானந்தா கல்லூரி, மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, மு/வற்றாப்பளை மகா வித்தியாலயம், மு/முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் சுமார் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு யோகாப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சியை இலங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரியின் இணைப்பாளர், யோகா, வர்மக்கலை, கராத்தே ஆசிரியர் கலாநிதி. துணைப் பேராசிரியர் சு.சுதர்ஜினி மற்றும் யோகாசிரியர் ஜெயம் ஜெகன் வழங்கி வைத்தார்கள்.



உலக வங்கியின் பிரதிநிதிகள் வலி.வடக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட வித்தகபுரம் சேதனப் பசளை உற்பத்தி நிலையத்தை அண்மையில் பார்வையிட்டனர்.
(படம்:-ரவிசாந்)



வரலாற்றுப் புகழ்பெற்ற தென்மராட்சி-வரணி சிட்டிவேரம் கண்ணகி அம்பாள் ஆலய இரதோற்சவம் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றது. (படம்.:சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 349
Viber 076 636 3378



# எரிபொருளுக்கான வரிசையிலும் இருமடங்கு வரிசை நீளும் அரசிக்கும் மாவுக்கும் மரக்கறிக்கும்

**அபிமன்யு**

**பொருளாதார சிக்கலில் இருந்து இலங்கையை மீட்க வெளிநாடுகளின் கைகள் நீளும். அவற்றைப் பெற்று விட்டால் அவர்கள் கைகளின் நகங்களில் எமது வளங்கள் நிறையும்.**

நாடு எங்கு போய்க் கொண்டிருக்கிறது என்பதை யாராலும் ஊகிக்க முடிய வில்லை. அவ்வளவுக்கு நாளுக்கு நாள் நாட்டின் பொரு ளாதார நிலை மோசமாக இரு ப்பதை உணரக் கூடியதாக உள் ளது.

இதற்கு யார் காரணம் என் பதை பகுத்தறிந்து அவர்களை குற்றம் சுமத்தும் அளவிற்கு இங்கு நிலை இல்லை.

ஒரு நோயாளி அவசர சிகிச்சையில் இரு க்கும் போது அவருக்கு சிகிச்சை அளிக்க வேண்டுமே தவிர அவருக்கு இவ்வாறு ஏற்பட யார் காரணம்? எவ்வாறு அது நிகழ்ந்தது என்ற ஆராய்ச்சியில் இற ங்குவது சரியான அணுகு முறை அல்ல.

மனித குலத்திற்கு மிக மிக முக்கியமான அத்தியாவசி யப் பொருளாக உள்ள எரி பொருளுக்கு ஒரு நாட்டில் தட்டுப்பாடு ஏற்படும் எனின் அதன் விளைவு மிகப் பய ங்கரமாக இருக்கும்.

ஏனெனில் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் மூல மாக இருப்பது எரிபொருள் என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

எரிபொருளுக்கான தட்டு ப்பாடு இற்றைக்கு இரண்டு மாதங்களாக நீடிக்கின்ற போதிலும் அவற்றை சுமுகப் படுத்தும் எந்தச் செயற்றிட்ட த்தையும் ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவில்லை.

எரிபொருள் தட்டுப்பாட்டை யடுத்து பொதுமக்கள் வீடு களில் எரிபொருளைச் சேமி த்து வைக்க முயன்றதன் எதி ரொலியே இந்தத் தட்டுப்பா ட்டிற்கான காரணமாகிறது.

அதிலும் கறுப்புச்சந்தை களினூடாக அதிக விலைக்கு எரிபொருள் விற்பனை செய் யும் செயற்பாடு மிகத் தாரா ளமாக நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதற்கு சரியான திட்டமிடல் இன்றிய செய ற்றிட்டமே மிக முக்கிய காரணமாக அமைகின்றது.

ஆம், எரிபொருளை. பரவ லாக்கம் செய்யாமல் குறிப் பிட்ட இடங்களிற்கு மாத்திரம்



வழங்கும் போது அங்கு மக் கள் கூட்டம் அலை மோதத் தொடங்குகிறது. இதனால் அங்கு வீண் அசௌகரி யங்களை பொதுமக்கள் எதிர் கொள்ளும் நிலை ஏற்பட்டு ள்ளது.

பொருளாதாரச் சிக்கல் தலைதூக்கியுள்ள இவ் வேளையில் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக வேலையை விட்டுவிட்டு நாள் கணக்கில் வரிசையில் நிற்பதென்பது குறிப்பிட்ட குடும்பங்களில் மேலும் சிக் கலை ஏற்படுத்துமே தவிர அது தீர்வாக அமைந்து விடாது.

அரசாங்கத்தின் திட்டமிடல் இன்றிய செயற்பாடுகள் இன்று நாட்டை குட்டிச்சுவரா க்கிவிட்ட நிலையில் அரசு க்கு எதிராக மக்கள் போரா டத் தயாரில்லை என்பது தான் இங்கு முடிவாகிறது.

அரசுக்கு எதிரான வெறு ப்பிலும் மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நாள் கணக்கில் வரிசையில் நின்று எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் அதிகம் அக் கறை காட்டுகின்றதை உணர முடிகின்றது.

எரிபொருளுக்கு மட்டும் தான் இந்த நிலை என்றால் அதற்கு இல்லை என்ற பதிலையே கூறிவிட முடியும். உணவுப் பொருட்கள் எவை யும் எவராலும் கட்டுப்பாட்டு விலையில் விற்கப்படுகிறதா எனின் அது வெறும் கேள்வி யாகவே முடிவுற்றுவிடும்.

அரசாங்கம் என்னதான் கட் டுப்பாடுகளை விதித்தாலும் அது வெறும் கண்துடை ப்பே தவிர வர்த்தக மாபியா க்களின் கைகளிலேயே பொரு ட்களுக்கான விலைப்பட் டியல் உண்டு என்பதை நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

எரிபொருளுக்கான இந்த வரிசை எதிர்காலத்தில் மாவு க்கும் அரிசிக்கும் மரக்கறி க்கும் இருக்கும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அவ்வாறான ஒரு நிலை வரு மாயின் அது அழிவுக்கானதா கவே இருக்கும்.

எரிபொருள் இல்லை எனின் அதற்கு பதிலீடு சில உண்டு. ஆனால் பசி, பட்டினி தலை தூக்கினால் அதற் கான தீர்வோ, பதி லீடோ வன்முறை யாகவே அமையும். இருப்பவர்களிடம் இல்லாதவர்கள் அடி த்துப் பறித்து உண் ணும் நிலை ஒன்றை நாம் வெகு விரை வில் சந்திக்கப் போகின் றோம் என்பது தான் உண்மை.

இன்று எரிபொருள் நிரப்பு நிலை யத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகா ப்பு வழங்குவதைப் போல ஒரு மூடை அரிசி கொண்டு செல்வதற்கும் பொலிஸ், இராணுவப் பாதுகாப்பு வரும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பதற்கான எச் சரிக்கை மணி அடிக்க ப்பட்டு விட்டதை நாம் உணர்ந்து கொண்டு செயற் பட வேண்டிய காலம் இது. இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் போது கூட தனிமையில் இருந்த பெண் ஒருவரை வாளால் வெட்டிக் கொலை செய்து விட்டு அவரின் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டிருந்த செய் தியைக் கேள்விப்பட்டேன்.

உலக நாடுகள் இலங் கையை மீட்கும் என்ற குரு ட்டு நம்பிக்கையை அரசா ங்கம் கைவிட வேண்டும். வெளிநாடுகள் உதவிக்கரம் நீட்டும். ஆனால் நீளும் அந் தக் கரத்திற்கு ஏதோ ஒரு தேவை இருக்கும். அந்தத் தேவையை அது பெற்றுக் கொண்டே தீரும். நாட்டை நாசமாக்கியவர்கள் யார் என்பது மக்களுக்கு நன்கு புரிந்து விட்டது. அதனால் அவர்களை மக்கள் பார்த்துக் கொள்வார்கள்.

நாம் அனை வரும் ஒன்றி ணைந்து இந்தக் கொடிய எரிமலையிலிருந்து எம்மை யும் நாட்டையும் பாதுகாத்துக் கொள்ள திடசங்கற்பம் கொள்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இதன்போது கங்காணி கார்த்திகேயன் சோர்மானமாக அமர்ந்திருந்தார். இதனை அவதானித்த மூப்பர் என்ன? கங்காணியார் ஒரு மாதிரியாக இருக்கிறியள். உடல் நிலை சரியில்லையோ?

**கங்காணி:** நேற்று முழு நாளும் பெற்றோலுக்கு வரிசையில காத்திருந்ததால களைச்சுப் போனன். அதோட பிறசருக்குப் பாவிக்கிற அமலோங் குளிசையின்ர விலையும் கண்டபாட்டில ஏறிற்றுது. குளிசையின்ர விலையேற்றம் பிறசரைக் குறையவிடுகுதில்லை.

**விதானையார்:** இஞ்சே கங்காணியார் இனி இலங்கையின்ர நிலை இதுதான். உலக நாடுகளிட்ட பிச்சை எடுத்து இலங்கை சீவியம் நடத்தலாமே தவிர, நாட்டின்ர பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. ஆகையால இந்த நெருக்கடியான நிலைக்குள்ள நாங்கள் வாழப்பழக வேணும்.

**சாத்திரியார்:** என்னைப் பொறுத்தவரை இப்ப இருக்கிற இளம் பிள்ளைகளால இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு ஈடுகொடுக்க முடியாது எண்டு தான் சொல்லுவன்.

**மூப்பர்:** ஏன்? சாத்திரியார் அப்படிச் சொல்லுறியள்.

**சாத்திரியார்:** போராட்ட காலத்தில நாங்கள் மோட்டார் சைக்கிளோ ஓடினனாங்கள். ஈருளியில தானே எங்கட பயணம் இருந்தது. அந்த நேரத்தில 58 வயதில 53 கிலோ மீற்றர் தூரம் சைக்கிளில் பயணம் செய்கிறேன் என்று அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் அ.துரைராஜா அவர்கள் கொடுத்த ஒரு செவ்வி பத்திரிகையில வந்திருந்தது.

இதுபோல 1991 இல வடமாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்த இரா.சுந்தரலிங்கம் ஐயா சைக்கிளிலதானே ஓடித் திரிந்து தன்ர கல்விப் பணியை ஆற்றினவர்.

ஆனால், இப்ப வீட்டிற்குப் பக்கத்தில இருக்கிற கடைக்குப் போறதா இருந்தாலும் மோட்டார் சைக்கிளையல்லோ முறுக்குகினம்.

**சிறாப்பர்:** சாத்திரியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. பேராசிரியர் அ.துரைராஜா, இரா.சுந்தரலிங்கம் போன்றவர்கள் மட்டுமல்ல, அந்த நேரத்தில



## தனியாளுக்கு இந்தியாவின்ர நிவாரணப் பொருள் இல்லையோ?

பணியாற்றின அத்தனை உத்தியோகத்தர்களுக்கும் ஒரே வாகனம் துவிச்சக்கரவண்டிதான். ஆனால் இண்டைக்கு நிலைமை அடியோட மாறிவிட்டுது.

**வாத்தியார்:** இப்ப இருக்கிற சூழ்நிலையில மோட்டார் சைக்கிளுக்குப் பெற்றோல் வாங்குவதற்காக நீண்ட வரிசையில காத்து நிற்பதற்குப் பதிலாக, துவிச்சக்கர வண்டியில பயணத்தை ஆரம்பிக்கிறதை நாங்கள் வலியுறுத்த வேணும். இது விடயத்தில யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்மாதிரியாக நடந்திருக்குது.

**பண்டிதர்:** உண்மை தான். மாணவர்கள் துவிச்சக்கரவண்டியில பாடசாலைக்கு வருவதை ஊக்குவிப்பதற்காக யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மாணவர்கள் கடந்த 23 ஆம் திகதி துவிச்சக்கரப் பவனியை நடத்தினார்கள். இது தொடர்பில, அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி பாடசாலைகள் இடையறாது இயங்குவதற்கும் கல்விச் செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுவதற்கும் உதவ வேணும்.

**விதானையார்:** ஓ! இப்ப வரிசையில நிண்டு பெற்றோல் வாங்குகிறோமோ இல்லையோ சோலியை வாங்கிக் கொள்கிறம். அதிலும் அரச உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையில நடக்கிற போட்டி எண்டால் சொல்லி மாளாது.

அண்மையில காங்கேசன்துறையில உள்ள எரிபொருள் நிலையத்தில, அரச உத் தியோகத்தர்களுக்கு தனியான வரிசையில பெற்றோல் வழங்கப்பட்டது. ஆனால் அதற்கு மறுபக்கத்தில நிண்ட பொதுமக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தினம். அதென்ன, மாதம் மாதம் சம்பளத்தையும் எடுத்துக் கொண்டு ஒழுங்காக வேலையும் செய்யாதவர்களுக்கு விசேட சலுகை. அரச உத்தியோகம் எண்டால் என்ன கொம்போ. எல்லாரும் ஒண்டுதான் எண்டு குழப்பம் செய்ய, அதில ஒருவர், அரச உத்தியோகத்தர்கள் தங்கட உத்தியோக அடையாள அட்டையைத் தனக்குக் காண்பித்த பிறகுதான் வரிசையில நிற்க முடியுமெண்டு காட்டின நாட்டாமைத்தனமும் அவரின் நாட்டாமைத்தனத்திற்குப் பயந்த அரச உத்தியோகத்தர்கள், அவரிட்ட தங்கட உத்தியோக அடையாள அட்டையைக் காண்பித்து விட்டு வரிசையில நிண்டதையும் பார்த்த போது மிகவும் பரிதாபமாக இருந்தது.

ஆனாலும் ஒரு அரச உத்தியோகத்தர் இவர் ஆரு எங்கட அடையாள அட்டையைப் பார்வையிடுவதற்கு. அரச உத்தியோகத்தர்கள் எண்டால், அவர்களுக்கு சண்டித்தனம் தெரியாது எண்ட நினைப்போ எண்டு உரத்துக் குரல் கொடுத்த போது தான் அந்த ஆள் அடங்கினவராம்.

**விதானையார்:** என்ன இருந்தாலும் அரச உத்தியோகத்தர்கள் தங்கட கடமையை- பணியை சிறப்பாகச் செய்தால் அவர்களுக்கு முதலில பெற்றோல் கொடுங்கள் எண்டு பொதுமக்களே சொல்லுவினம்.

ஆனால் இப்ப எங்கட அரச உத்தியோகத்தர்களில பெரும்பாலானவர்கள் தங்கட கடமையை ஒழுங்காகச் செய்யாமல் பேய்க்காட்டுவதால, மக்கள் அலையினம். இந்தத் திறத்தில எப்படி பொது மக்கள் அரச உத்தியோகத்தர்களை மதிப்பினம்.

**சிறாப்பர்:** என்ன இருந்தாலும் எரிபொருள் நிலையங்களில சண்டை சச்சரவு ஏற்படுவதை முற்றாகத் தவிர்க்க வேணும், இல்லை எண்டால், பேராபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களும் வந்துவிடும்.

அண்மையில யாழ்ப்பாணத்தில உள்ள ஒரு எரிபொருள் நிலையத்தில சிலரால தாக்கப்பட்ட 23 வயது இளைஞன் ஒருவர் இறந்து போன சம்பவம் ஊடகங்களில வெளிவந்திருந்தது எண்டால் பாருங்களன்.

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் அந்தச் சம்பவம் தொடர்பில பொலிஸார் உரிய விசாரணை நடத்த வேணும் என்பதுதான் என்ர கோரிக்கை.

**மூப்பர்:** அதுசரி விதானையார் இந்திய அரசாங்கத்தால வழங்கப்பட்ட நிவாரணத்தில தனியாளுக்கு நிவாரணம் இல்லை எண்டு ஏதேனும் நிபந்தனை இருக்குதோ?

**விதானையார்:** ஏன் தனியாள் சாப்பிடுகிறதில்லையோ? என்னைப் பொறுத்தவரை தனியாளுக்குத் தான் முதலில அந்த நிவாரணம் வழங்கப்பட வேணும்.

**மூப்பர்:** நான் அறிஞ்ச வகையில உடுவில் பகுதியில தனியாள் என்பதால ஒருவருக்கு இந்திய நிவாரணம் வழங்கப்படவில்லையாம்.

ஆனால் அதேநேரம் வேறு சில பிரதேச செயலகங்களில தனியாளுக்கு குறித்த நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டிருக்குது.

**சாத்திரியார்:** இப்படியான விடயங்கள்தான் முரண்பாட்டை ஏற்படுத்துறது. தனியாளுக்கு நிவாரணம் இல்லை. தனியாளுக்கு எரிவாயு வழங்க முடியாது எண்டால், அந்தத் தனியாள் என்ன செய்யிறது. உண்மையில தனியாளாக இருப்பது மிகவும் பரிதாபத்திற்குரிய விடயம். இதால அரச நிர்வாகிகள் நெகிழ்ச்சித் தன்மையோட நடந்து கொள்ள வேணும். இவ்வாறு சாத்திரியார் சதாசிவம் கூற, அதனைத் தானும் ஆதரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொலருக்கும் ரூபாய்க்கும் இடையில் சிக்கித் தவிக்கும் ஈழத் தமிழர்கள்


இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடியானது தம்மை எந்த வகையிலும் பாதிக்காது என வடக்கிலும் - கிழக்கிலும் மார் தட்டும் ஒரு சில ஈழத் தமிழர்களை இன்று வரை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

இந்த பொருளாதார நெருக்கடிக்கு அவர்கள் கூறும் காரணம். நாம் எதைக் கண்டும் அஞ்சத் தேவையில்லை. ஏனெனில் முப்பது வருடங்களுக்கும் மேலான யுத்த சூழலில் ஏற்கனவே வாழ்ந்து பழக்கப்பட்ட அனுபவத்தைக் கொண்டவர்கள் நாம் என்பதே அதன் அர்த்தம்.

அதைவிட இன்னும் சிலர் ஒரு படி மேலே போய் கூறும் காரணம். மதவாச்சியில் இருந்துதான் பொருளாதார நெருக்கடி தென்னிலங்கை வரை தொடங்குகிறதே தவிர, வடக்கிலும் - கிழக்கிலும் வாழும் நமக்கில்லை. அப்படியென்றால் எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் பால்மாவுக்கும் ஏன் இவர்கள் வரிசையில் கால் கடுக்க நிற்கின்றார்கள் என்றால் அதற்கு அவர்களிடம் முழுமையான பதிலில்லை.

ஆனால், அவர்கள் ஒன்றை மட்டும் சிந்திக்க தவறிவிட்டார்கள். வடக்கு - கிழக்கில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் இருந்தது பொருளாதார வீழ்ச்சியில்லை. அது பேரினவாத சிங்கள அரசால் சிறுபான்மையின தமிழர் மீது கொண்டு வந்த பொருளாதாரத் தடையாகும். இதன் அடிப்படையை முதலில் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது இலங்கையில் அத்தியாவசியப் பொருட்



களை இறக்குமதி செய்ய டொலரும் இல்லை. மக்கள் தம் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு அத்தி யாவசியப் பொருட்களும் இல்லை. காரணம் இலங்கை பொருளாதார வீழ்ச்சியின் உச்சத்தை தொட்டு விட்டது.


வடக்கு - கிழக்கு தாயகமான ஈழத்தில் பொதுவாக டொலரையும் ரூபாவையும் வகைப்படுத்தக்கூடிய இரண்டு வகையான ஈழத் தமிழர்கள் இருக்கின்றார்கள். அதில் முதலாவது வகையினர் புலம்பெயர் தேசத்து இரத்த உறவுகள் அனுப்பும் டொலரின் பலத்தில் மட்டும் தங்கி வாழ்பவர்கள்.

மற்றைய வகையினர் சொந்த உழைப்பினாலும் மற்றும் சொந்த வியர்வையினாலும் வரும் சொந்த நாட்டினுடைய ரூபாவின் பலத்தில் எழுந்து நிற்ப வர்கள். இவர்கள் இருவருக்கும் இடையிலான ஏற்றத் தாழ்வுகள் எப்போதும் டொலருக்கும் ரூபாய்க்கும் இடையில் இருந்து கொண்டேதான் இருக்கும். அதில் எந்த சந்தேகமும் இல்லை.

சொல்லப் போனால் யுத்தம் முடிவடைந்து பதின் மூன்று வருடங்களை நெருங்கிய பின்பும். யுத்த சூழலின் பாதிப்பிலிருந்து அதனுடைய உளவியல் ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான தாக்கத்தில் இருந்து இந்த விநாடி வரை வடக்கிலும் - கிழக்கிலும் இன்னும் முழுமையாக மீண்டு வர முடியாத நிலையில் இருக்கும் ஈழத்தமிழ் குடும்பங்களை இந்த பொரு ளாதார வீழ்ச்சியானது எப்படி..?

பாதிக்காது இருக்க முடியும் என டொலரின் பலத்தில் மட்டும் தங்கி வாழ்பவர்கள் ரூபாவின் உயர்வு பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சாம்.ரமேஸ்குமார்



# என்று முடியும் வரிசை யுகம்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி என்றும் இல்லாதளவு மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது.

எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக பொது மக்கள் கிலோ மீற்றர் கணக்கில் வரிசையில் பல மணி நேரமாக காத்துக் கிடக்கின்றனர்.

எரிபொருள் தற்போது அனைத்து மக்களின் அத்தியாவசியப் பொருளாக மாறியுள்ளது. எரிபொருள் இன்றி மக்கள் தமது அன்றாட வாழ்வினை முன்னெடுக்க முடியாத அவல நிலையில் உள்ளனர்.

பிரதேச செயலகங்கள் மூலம் பங்கீட்டு முறையில் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் பதுக்கல் வியாபாரங்கள் இருக்கும் வரை எரிபொருள் விநியோகம் என்றும் சீரடைய மாட்டாது.

எரிபொருள் கப்பல் இன்று வருகின்றது. நாளை வருகின்றது என அமைச்சர்கள் அறிக்கை விடுகின்றார்களே தவிர எரிபொருட்கள் வந்தபாடு இல்லை.

அத்தியாவசிய தேவையான சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் இன்மை காரணமாக தமது அன்றாட செயற்பாட்டை முன்னெடுக்க முடியாமல் இருப்பதனால் சுகாதார பேரிடர் ஏற்படும் அபாய நிலை உருவாகியுள்ளது.

எரிபொருள் இன்மை காரணமாக முழு நாடுமே தற்போது ஸ்தம்பித்து ள்ளது.

இருக்கின்ற குறைவான எரிபொருளை கொண்டே நாடு ஓரளவு ஏனும் நகரக் கூடியவாறு இருக்கின்றது.

எரிபொருள் நெருக்கடியால் பாடசாலை செல்லும் மாணவர்கள், ஆசிரி யர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடு முழுமையாக பாதிப்படைந்துள்ளது.

இதுவரை காலமும் இந்தியாவின் கடன் உதவி மூலம் எரிபொருள் நெருக்கடியை சமாளித்து வந்த இலங்கை அரசாங்கம் இந்தியாவின் கடன் உதவி முடிந்துள்ள நிலையில் தற்போதைய எரிபொருள் நெருக்கடியை சமாளிக்க முடியாமல் திணறி வருகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பேரிடர் என்று சுமூக நிலைக்கு வரும் என்று தெரியாத நிலையில் அனேகமானோர் தற்போது துவிச்சக்கர வண்டியினை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

யுத்தகாலங்களில் வடபகுதியில் பெரும்பாலானோர் துவிச்சக்கர வண்டியையே பயன்படுத்தி வந்தனர். தமது அன்றாட செயற்பாடுகள் அனைத்தையுமே துவிச்சக்கரவண்டியைப் பயன்படுத்தியே நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. துவிச்சக்கரவண்டியின் பயன்பாடு உடல் ஆரோக் கியத்திற்கும் நன்மையாக அமைந்திருந்தது.

எரிபொருள் பவுசர் எப்போது வரும் என்று மணிக்கணக்கில் பல கிலோமீற்றர் தூரம் இரவு பகலாக காத்திருக்க வேண்டிய நிலை உருவாகி யுள்ளது.

பலமணி நேரமாக காத்திருந்தாலும் பெற்றோல், டீசல் நிச்சயமாக கிடைக்கும் என்று சொல்ல முடியாது அப்படி கிடைத்தாலும் மிகக் குறைந்த அளவுக்கே கிடைக்கின்றது. இதனை சில நாட்களுக்கு கூட பயன்படுத்த முடியாது.

வாகன இலக்கங்களின் அடிப்படையில் பிரதேச செயலகத்தின் நேரடி கண்காணிப்பில் எரிபொருள் விநியோகத்தை பங்கீட்டு முறையில் விநி யோகித்தால் மாத்திரமே வரிசை யுகத்திற்கு ஒரு முடிவு வரும்.

க.மதீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## தண்டனை சரியா?





நேற்றைய தொடர்ச்சி)

அந்த பொம்மையைக் கண்டவர்கள் அதனை நல்ல விலைக்கு விற்கலாம் என்று கூறிக் கொண்டிருக்கும் போதே அடுத்த வீட்டுப் பையன் வேலு ஓடி வந்து அந்த பொம்மையை உடைத்து விட்டு ஓடினான்.

ஆனால் நான்கு சகோதரர்களும் அவனைத் துரத்திப் பிடித்து இழுத்து வந்தார்கள். அவனுக்கு என்ன தண்டனை கொடுப்பது என்ற பிரச்சினை எழுந்தது.

இது ஒரு நல்ல வாய்ப்பு என இந்துவர்மன் கருதி படிக மணியைக் கையில் வைத்துக் கொண்டான். அவன் ஏழையின் மூத்த மகனிடம் "நீ இவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று நினைக்கிறாய்?" என்று கேட்டான். அவன் "நூறு சவுக்கடிகள் கொடுப்பதுதான் சரி" எனவே இந்துவர்மனின் கையிலிருந்த படிகமணி கையி சிவப்பாக மாறியது. மன்னன் இரண்டாவது மகனிடம் தண்டனை பற்றிக் கேட்க" அந்த வேலுவிடமு ள்ள பொம்மைகளை எல்லாம் எடுத்து உடைத்துப் போட வேண்டும்" என்றான். அப்போதும் இந்துவர் மனிடமுள்ள படிகமணி சிவப்பாக இருந்தது.

மூன்றாவது மகனிடம் தண்டனை பற்றிக் கேட்கவே அவன் "வேலுவை இதே மாதிரி ஒரு பொம்மையைச் செய்யச் சொல்லி அதை நாம் உடைத்தெறிய வேண்டும்" என்றான். அப்போது இந்துவர்மனின் படிகமணி கறுப்பாக மாறியது. அப்போது நான்காவது மகன் "வேலுவை தண்டிப்பதால் உடைந்து போன பொம்மை எங்களுக்குத் திரும்பக் கிடைக்கப் போவதில்லை. அதனால் அவன் செய்த தவறை அவனே உணரும்படி செய்ய வேண்டும்" என்றான். அப்போது இந்துவர்மனின் படிகமணி மஞ்சளாக மாறியது. அப்போது இந்துவர்மன் அந்தக் கடைசி மகனே மகா ஞானியாவான் என அறிந்து கொண்டான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்




இராமன் அம்பு தொடுத்தான்; அவன் தலைமட்டும் தனியே அறுந்து அலை நிரம்பிய கடலுள் ஆழ்ந்து மறைந்தது; அதுவே அவனுக்குச் செய்த ஈமக் கடனும் ஆனது.

**ராவணன் தீரா ஆசை**

போர்க்களத்துக்குத் தம்பி கும்பகர்ணனை அனுப்பிய இராவணன் முடிவுக்குக் காத்திராமல் தன் காதல் நோய்க்கு விடிவு காண விழைந்தான்; போரில் இராமனை வெல்வது என்பதைவிடக் காதலில் சீதையை அடைவது தான் அவனுக்கு முக்கியமாய்ப்பட்டது. அதற்கு வழிதேடி மகோதரனை அறிவுரை கேட்டான்.

அரக்கருள் ஒருவனாகிய மருத்துவன் என்பவனை சனகனாய் உருவெடுத்து வரும்படி பணித்தான்; அவனை அடுத்து வரும்படி இராவணன் கூறி விட்டு, அமுதின் அனைய அழகியை நாடிச் சென்றான்.

"குமுதம் போன்ற இதழ்களை உடையவளே! நீ தான் எனக்கு உயிர் தர வேண்டும்; உன் அடைக்கலம் நான்" என்று சொல்லிப் பழைய பாட்டைப் பாடினான்; தனக்கு இணங்குமாறு வேண்டினான்; அவள் துவண்டு, அவனை வெகுண்டு வெறுத்து ஒதுக்கினாள். நாடகம் தொடங்கியது;

சனகன் வடிவில் வந்த அரக்கன் தன் உரையாடலைத் தொடங்கினான். "அன்பு மகளே! அவன் ஆசைக்கு இணங்கு; பிணங்கினால் நம் குலத்தையும் நம்மையும் அழித்து விடுவான்; நீ மனம் வைத்தால், நான் உயர் பதவிகள் பெறுவேன்; நீயும் அவனுக்குத் தேவியாவாய்; இருவர் ஆவியும் நிற்கும்; நீ சிறையிடைத் தேம்பி என்ன பயன்?" என்று அறிவுரை கூறினான்.

"மானத்தை விட்டு என் தந்தை உயிர் வாழான் ஈனச் செயலுக்கு அவன் ஒருகாலும் சம்மதியான்; முறை கெட்டு வாழும்படி உரை செய்யமாட்டான்" என்றாள் சீதை.

வாள் உருவி சனகனாய் வந்தவனைக் கொல்லக் கையோங்கினான். நகைத்தாள் சீதை, "நாடகம் நன்று" என்று நவின்றாள். "நீ என்னையும் கொல்ல மாட்டாய்; இவனையும் கொல்லப் போவது இல்லை; யாரையும் கொல்லப் போவதில்லை; அது மட்டுமன்று; போரில் நீ வெல்லப் போவதும் இல்லை."

"உனக்கு அழிவு நெருங்கிவிட்டது; இராமன் அம்பு நீ வரும் வழியைப் பார்த்துக் கொண்டு இருக்கிறது; புகழ் எனக் காகக் காத்துக் கொண்டிருக்கிறது" என்றாள். மகோதரன் இடை நின்று, இராவணனைத் தடுத்தான்.

"அவசரப்பட்டு இவனைக் கொல்லாதே; நாளை நீ வெற்றி பெற்றால், சீதை உம் வசமாவாள்; அப்பொழுது தன் தந்தை எங்கே என்று அவள் கேட்பாள், அங்கை விரிக்க வேண்டி வரும்" என்று கூறினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த ஞாயிறு தந்தையர் தினம் கொண்டாடினீர்களா வியாசரே?







அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி கிண்ணம் வென்ற இலங்கை அணியின் வெற்றி எப்படிப்பட்டது வியாசரே?

**ரஞ்சன் — சாவகச்சேரி**

அடுத்தவர்கள் ஏதும் நினைப்பார்களோ என்று எமக்குப்பிடித்ததை செய்யாமல் இருப்பது சரியானதா வியாசரே?

இது பயங்கரமான முட்டாள் தனம். எமக்கு எது பிடிக்கிறதோ அதை நாம் பிரியத்துடன் செய்ய வேண்டும்.
பிடித்ததை செய்யும்போது கிடைக்கும் திருப் திக்கு அளவே இல்லை.
பிடிக்காத வேலையில் இருப்பது பிடிப்பில்லாத மனைவியுடன் வாழ்வதற்கு சமம் என்று எனக்கு கற்பித்த ஆசிரியர் அடிக்கடி கூறுவார்.
அடுத்தவரைப் பார்த்து அவர்களுக்காக நாம் வாழ்வோமாக இருந்தால் அந்த வாழ்க்கை பிடிப்பின்றியதாகவே இருக்கும்.

**கேதீஸ்வரா — சாவகச்சேரி**

தட்டுங்கள் திறக்கப்படும் என்று கடவுள் சொன்னவாறு பலமுறை தட்டி விட்டேன் திறக்கவே இல்லையே?

தட்டினால திறக்கும். அதற்காகத் தட்ட வேண்டிய இடத்தைத் தவிர்த்து வேறு எங்கோ போய்த் தட்டினால் யார் என்ன செய்துவிட முடியும்.
தட்டுங்கள், திறக்கவில்லையெனில் உடைத்து உள் செல்லுங்கள். இறைவன் இருப்பானாயின் நிச்சயம் திறப்பான்.
நீங்கள் தட்டுமிடம் திறக்கவில்லை எனின் அங்கு இறைவன் இல்லை என்பதே பொருள்.
அதனால் உடைத்து உட்செல்வதில் தவறேதும் இல்லை.

## அன்பு வாசகர்களே உங்கள் கேள்விகளை 076 097 3126 SMS செய்யுங்கள்

**சுதன் — குப்பிழான்**

பிரதமர் ரணில் நாட்டைக் காப்பாற்றுகிறாரா? அல்லது ராஜபக்ஷக்களைக் காப்பாற்றுகிறாரா?

இந்தக் கேள்விக்கான பதிலை நான் சொல்லித்தான் மக்களுக்குத் தெரிய வேண்டும் என்று இல்லை.
அதைவிட இதற்கான பதிலை அறிந்திருந்தும் அதை என்னிடம் கேட்கிறீரே சுதன். ஏன்? முடியல...
இதில் எனது கருத்து என்னவெனில் காலையில் எழுந்தவுடன் இன்றைய வீட்டுச் செலவுக்கு எம்மிடம் காசு இல்லை. நாம் எதிர்காலத்தில் பட்டினி கிடந்து சாகும் நிலை வரப்போகிறது.
வரலாறு காணாத பஞ்சம் எம்மை வாட்டப் போகிறது.
இவற்றைச் சொல்வது தான் ஆட்சிபீடம் என்றால் இந்த வியாசரும் பிரதமர் பதவிக்கு பொருத்தமானவனே.

**தாரா — யாழ்ப்பாணம்**

அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி கிண்ணம் வென்ற இலங்கை அணியின் வெற்றி எப்படிப்பட்டது வியாசரே?

முப்பது ஆண்டுகளின் பின் பலம் பொருந்திய அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி வரலாற்று சாதனையை படைத்துள்ளது இலங்கை அணி.
இலங்கையின் இளம் வீரர்கள் மிகச் சிறப்பாகச் செயற்படுகிறார்கள். தோல்வி கண்டு துவளாது வெற்றிக்காகப் போராடுகிறார்கள்.
இதே உத்வேகத்துடன் விளையாடினால் அச்சுறுத்தல் மிக்க அணியாக இலங்கை மிளிரும்.
இற்றைக்கு ஒருவருடங்களுக்கு முன்பு நாம் இவ்விடத்தில் இதை எழுதியிருந்தோம். இன்று அது பலித்திருக்கிறது.

> அன்பு வாசகர்களே!
> உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
> 076 097 3126
> என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**ராஜ் — வதிரி**

நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கிறதே வியாசரே?

சரியானது எதுவோ அதைவிடுத்து தவறானதை தெரிவு செய்துவிட்டு தெய்வத்தின் மீது பழிபோடுவது சரியல்ல.
தெய்வம் ஒருநாளும் வேறு மாதிரி நினைப்பதில்லை. மனிதர்களாகிய நாம் தான் வேறு வேறு மாதிரி நினைத்து அலைபாய்ந்து கொண்டு திரிகின்றோம்.
ஒரு விடயத்தை செய்யமுன் இரண்டிற்கு மூன்று முறை யோசனை செய்து அதில் இருக்கும் சவால்களைத் தெரிந்து கொண்டு, அதை என்னால் செய்ய முடியுமா என சிந்தித்து செயற்பட்டால் நாம் நினைத்ததை தெய்வம் நடத்தி வைக்கும்.
இதைச் செய்யாமல் தெய்வத்தை குறை சொல்வதை நிறுத்துங்கள்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்பது தானே மக்கள் அனைவரதும் எதிர்பார்ப்பாய் உள்ளது வியாசரே?

நடக்கும் என்பார் நடக்காது. நடக்காதென்பார் நடந்துவிடும். கிடைக்கும் என்பார் கிடைக்காது. கிடைக்காதென்பர் கிடைத்துவிடும்.
அப்படி விரைவில் ஆட்சி மாற்றம் ஏற்படுமென்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து பிரார்த்திப்போமாக.

**தாருஷ் — மானிப்பாய்**

கடந்த ஞாயிறு தந்தையர் தினம் கொண்டாடினீர்களா வியாசரே?

தாய்- தந்தையரை மதிக்கவும் அவர்களைப் போற்றி புகழவும் அதற்கொரு தினம் வைத்துத் தான் கொண்டாட வேண்டும் என்ற தேவை ஏதும் இல்லை.
அவ்வாறு செய்வோமாக இருந்தால் அது போலி வேடமாகவே இருக்கும்.
நாம் வாழும் வரை எம்மை பெற்று வளர்த்த பெற்றோரை மகிழ்வாய் வைத்திருக்க முயற்சிப்போம்.
அந்தத் தெய்வங்களின் கண்ணில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்த நாம் காரணமாக இருப்போமானால் நாம் வாழ்வில் நிம்மதியாக வாழவே முடியாது.
''அம்மா என்றழைக்காத உயிரில்லையே''
''தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னாலே '' இப் பாடல்களைக் கேட்கும் போது மனம் உருகவே செய்கின்றது.
எம்மைப் பெற்றவர்களே இவ்வுலகில் தெய்வங்கள்.

**தயாபரன் — ஓட்டுசுட்டான்**

தமிழர் பகுதியில் இருந்து ஏன் ஒரு சிங்கள மொழியிலான பத்திரிகை வெளியிடப்படவில்லை?

தம்பி தயாபரன் இங்கு அது ஒன்று; தான் குறைச்சல். அதையும் முடித்துவிட்டால் அனைத்தும் முடிந்துவிடும்.
தமிழர் பூர்வீக பிரதேசங்களை அடாத்தாய் பிடித்து அதில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டு வருகிறார்கள்.
பௌத்தத்திற்கு சம்பந்தமே இல்லாத இடங்களில் கூட பௌத்த விகாரைகளை அமைக்கிளறார்கள்.
தொட்டதற்கெல்லாம் படையினரை மூக்கு நுழைக்க விடுகிறார்கள். இவை போதாது என சிங்கள மொழியில் பத்திரிகைகளையும் வெளியிட்டால் நிலை எப்படி இருக்கும். கடவுளே கடவுளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

## வலி சொல்லும் தொடர்... 36

இவ்வாறு விருந்தினராக வருபவர்கள், உள்ளே அகதிகளைப் பார்க்கச் செல்லும்போது தொலைபேசி கொண்டு போக முடியாது. குறிப்பிட்ட உணவுப் பொருட்களோ, சிகரெட், மது போன்றவற்றை எடுத்துச் செல்ல முடியாது. கடுமையான சோதனையின் பின்னரே, விருந்தினர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவர். சகல பாதுகாப்புச் சோதனைகளுக்குள்ளேயும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குக் கம்பி நீட்டிவிட்டு, சில விருந்தினர்கள் உள்ளே சட்ட விரோதமாகப் பொருட்களை எடுத்துச்செல்வது அவ்வப்போது நடக்கும். அப்படியான விருந்தினர்களை குடிவரவு அமைச்சு அலுவலகம் முகாமுக்கு வர முடியாதவர்கள் பட்டியில் சேர்த்து, -தடைவிதிக்கும்.

முகாம் அகதிகளின் பெயர்களை அநேகமாக சகல உத்தியோகத்தர்களும் ஞாபகம் வைத்திருப்பர். இல்லாவிட்டாலும், நேரில் சென்று பேசுவதற்கோ அல்லது உத்தரவுகளை வழங்குவதற்கோ பெயர் என்பது பெரும்பாலும் முகாமில் தேவைப்படுவதில்லை.

ஆனால்,முகாமிலுள்ள அகதிகள் எல்லோருக்கும், அவர்கள் உள்ளே வரும்போது ஓர் இலக்கம் கொடுக்கப்படும்.

ஆங்கில எழுத்தொன்றில் ஆரம்பித்து, மூன்று எண்களுடன் முடிகின்ற இலக்கம் அது. முகாமுக்குள் வருகின்றபோது, அந்த இலக்கத்தை அகதிகளுக்குக் கொடுக்கின்றபோது, அதை அவர்கள் பெரிதுபடுத்துவதில்லை. விரைவில் வெளியேறப்போகும் தங்களுக்கு, அந்த இலக்கம் ஏதோவோர் அடையாள எண் போன்றது என்பதாகவும், முகாமின் நிர்வாகத்தின் ஒரு பகுதியாக அதைத் தங்களுக்குத் தருகிறார்கள் என்பதாகவும் அவர்கள் நம்பி விடுகிறார்கள்.

ஆனால், விடுதலையாகாமல் நீண்ட காலம் முகாமுக்குள் தடுத்து வைக்கப்படுகின்றபோது, முகாமின் பாதுகாப்பு விதிமுறைகள் அனைத்துமே அகதிகளுக்கு மிகுந்த எரிச்சலூட்டுவதாக மாறி விடுகின்றன.

முகாமில் விதிக்கப்படுகின்ற எந்த விதிமுறையையும் அனுசரிக்கக் கூடாது என்ற வெறுப்பு நிலை எல்லா அகதிகளுக்கும் ஏதோவொரு நிலையில் வந்து விடுகிறது.

அது இயல்புதான். தங்களால் எதுவும் செய்ய முடியாத கையறு நிலையிலிருக்கும் உயிரினத்துக்குக் கட்டுப்பாடுகள் என்பது எப்போதும் மீறப்பட வேண்டியதாகவே தோன்றும்.

அதிலும், தங்களை யாராவது இலக்கத்தை வைத்து அழைத்தால், நீண்டகால அகதிகள் எவராக இருந்தாலும், அவர்கள் பெருஞ்சீற்றம் கொள்வர். தங்களது பெயரைச் சொல்லி அழைக்க வேண்டும் என்பதில் அவர்கள் இறுக்கமான எதிர்பார்ப்புடையவர்கள். இலக்கத்தை வைத்துத் தங்களை அழைப்பதானது, தங்கள் மீதான மதிப்பிறக்கமாகவே அவர்கள் உணர்கிறார்கள். தங்களைக் குற்றவாளிகள்போல் நடத்துவதாக அவர்கள் உணர்கிறார்கள்.

அன்று அதுதான் நடந்தது. முகாமுக்குப் புதிதாக வேலைக்கு வந்திருந்த உத்தியோகத்தர் டோனி , கடவுளுக்கு வந்திருந்த விருந்தினருக்காக, கடவுளை அழைப்பதற்கு, அல்பா கம்பவுண்டுக்குச் சென்றிருக்கிறான். அவனது அறையில் கடவுள் இல்லை. ஜிம்மில் போய் தேடியிருக்கிறான், அங்குமில்லை.


மீண்டும் கடவுளின் அறைக்கு வந்து, அறையோடு இணைந்த குளியலறைக்குள் இருக்கிறானா என்பதை அறிவதற்கு, அவனது இலக்கத்தைச் சொல்லி அழைத்தான்.

துவாயொன்றை இடுப்பில் கட்டிக் கொண்டு, சோப்பு நுரைகள் உடலெங்கும் வழிய, வெளியே உதறிக் கொண்டு வந்த கடவுள், டோனி மீது பாய்ந்தான்.

டோனி சற்று விலக, துவாய் அவிழ்ந்த கடவுள் நிர்வாணமாகத் தரையில் வீழ்ந்தான். டோனி அதிர்ந்துபோய், ரேடியோவை எடுத்து,

"ரெஸ்போன்ஸ் ரெஸ்போன்ஸ், கோட் பிளாக். அல்பா கம்பவுண்ட்" என்று குழறினான்.

மீண்டும் கடவுளின் அறைக்கு வந்து, அறையோடு இணைந்த குளியலறைக்குள் இருக்கிறானா என்பதை அறிவதற்கு, அவனது இலக்கத்தைச் சொல்லி அழைத்தான். துவாயொன்றை இடுப்பில் கட்டிக் கொண்டு, சோப்பு நுரைகள் உடலெங்கும் வழிய, வெளியே உதறிக் கொண்டு வந்த கடவுள், டோனி மீது பாய்ந்தான். டோனி சற்று விலக, துவாய் அவிழ்ந்த கடவுள் நிர்வாணமாகத் தரையில் வீழ்ந்தான்.



எதிர்பாராத திசையிலிருந்து வந்து தாக்கிய மிருகத்தைக் கண்டு ஓடுவதுபோல டோனி ஓட, துவாயை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு, கடவுள் அவனைக் கலைத்தான். கடவுளின் உடல் மிகவும் திடகாத்திரமானது. ஜிம்முக்குத் தினமும் சென்று தசைக் கொத்துகளை இறுக்கமாகப் பேணுபவன்.

அரை நிர்வாணமாக அவன் ஓடிவந்ததை, அங்கு உதவிக்கு ஓடி வந்த உத்தியோகத்தர்கள் கண்டு, அவர்களும் அதிர்ந்து போனார்கள். ஏனெனில், நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகள் இலகுவில் யாருடனும் சர்ச்சைக்குப் போவதில்லை.

தாங்களுண்டு, தங்களது வழக்குண்டு, தங்களது நீண்டகால அகதி நண்பர்கள் என்று தங்களுக்குள் ஓர் உலகில் வாழ்பவர்கள்.

முகாம் உத்தியோகத்தர்கள் உட்பட சகலருடனும் மிகுந்த மரியாதையோடு பழகுபவர்கள். இந்த முகாம் என்பது தங்களது வீடென்றாகிவிட்டது என்ற யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு நடப்பவர்கள். அவர்களில் யாராவது மிரண்டுவிட்டால், அது சாது மதம் கொண்ட நிலைதான்.

தன்னை இலக்கத்தில் அழைத்த அந்தக் குரலை கடவுளால் ஜீரணிக்கவே முடியவில்லை. ஓடி வந்த கடவுளை உத்தியோகத்தர்கள் இழுத்துப் பிடித்தார்கள். தன்னை அழுத்திப் பிடித்த மூன்று உத்தியோகத்தர்களின் வலுவான பிடியை மீறி, அவன் கெட்ட வார்த்தைகளால் வைதான். அவனது கண்கள் கண்ணீரில் திரண்டு போயிருந்தன. அவனால் கட்டுப்படுத்த முடியாத அந்தக் கோபத்தை உத்தியோகத்தர்கள் அனைவரும் உணர்ந்து, அது அடங்கும் வரை, அவனைத் தாங்கினார்கள்.

நிலைமையைக் கேள்விப்பட்ட, அன்றைய நாளின் முகாம் பாதுகாப்புப் பொறுப்பாளர் ஜெப்ரி ஓடிவந்தான். கையெடுத்து தொழாத குறையாக, கடவுளிடம் மன்னிப்புக் கோரினான். டோனி புதிதாக வேலைக்கு இணைந்தவன் என்றும், அவனுக்கு முகாம் நடைமுறை தெரியாமல் தவறு செய்து விட்டான் என்றும் சொல்லி, கடவுளின் கோபத்தைக் கரைக்க முயன்றான். கூட நின்ற சகல உத்தியோகத்தர்களும் கடவுள் மலையிறங்கும் கணத்துக்காகக் காத்து நின்றனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மைகள்

அதிகாரம் கைவந்தால்
மதிகெட்டுப் போவதென்ற
கருத்தினை மனதிற்கொள்க
புதிர் போட்டு வாழ்கின்ற
வாழ்விற்கு வழிகூறும்
சாட்சியம் நிலைப்பதில்லை

அதிகார மோகத்தால்
அறம் மறந்து வாழ்வோர்க்கு
அதிகாரம் நிலைப்பதில்லை
நானென்னும் அகங்காரம்
குடிகொண்ட மனிதர்க்கு
அறம்பேசி ஆவதென்ன?

தற்காப்புத் துணைதேடி
வாழ்கின்ற வாழ்வியலில்
உண்மைகள் வாழ்வதில்லை
உண்மைகள் தமைக்காக்க
பொய்மைகள் தமைக்கூறின்
வாழ்வியலும் வெல்வதில்லை

வளவை வளவன்

## வாழ்வுக்கான போராட்டம்

நாட்டில் மருந்து தட்டுப்பாடு வந்துள்ளதே
நாலாதிசையும் மக்கள் வீதியில்
சாத்வீக போராட்டம்
நாமறியோம் பராபரமே
தமிழினம் என்ன செய்ய முடியும்
உரிமைக்காக குரல் கொடுப்பதா
விலை வாசிக்காக குரல் கொடுப்பதா?

எதுவுமே ஏறாது
சிங்கள் தலைமையின் காதுதனிலே
எதுவும் செய்ய முடியாது தவிக்கின்றோமே
விலைவாசி ஏற்றத்தால்
ஏங்கும் மக்களையும் பாராயோ
வீரப்பேச்சு பேசி விழவுதான் கிடைக்குமா

எரிபொருள் இல்லை
வாகனம் வீதியிலே
எரிவாயு இல்லையே
குடும்பங்கள் வீதியிலே
உணவுப் பொருட்கள் விலையேற்றம்
உண்ணமுடியலே
டொலர் தட்டுப்பாடு
கடலில் கப்பல்கள் வரிசையில்


எஸ்.பி.தனா,
தெல்லிப்பழை.

## கடைசி பிறப்பு

மூச்சு நின்று போன முல்லை மண்ணிலே
முத்து முத்தான சித்திரங்களை சீரழிக்கும்
முரட்டு வாத்தியாரின் மூச்சை நிறுத்திட
இறைவனே இறங்கி வா, நீ பிறந்து வா
கார்த்திகை மைந்தனே கண் திறக்காயோ
கலாசாரம் நிலைத்திட அவதாரம் எடுக்காயோ
ஆசிரியர் என்னும் புனிதரை
அவமானப்படுத்தும் ஒரு சிலரை அழித்திட
அவதாரம் எடுக்காயோ தமிழ்க் கடவுளே!
அன்னை தமிழ் கலாசாரம்
அகிலம் போற்றிய கலாசாரம்
அழிந்து போக ஒரு ஆசான் துணையாவதா?
அறியா பருவப் பள்ளி குழந்தை
அழிக்க கூடா கற்பை அழிப்பதா?
உன் தாயின் கருவறை இன்று
உன்னை சுமந்தது பாவம் என்று
உன்னுடன் பிறந்த சகோதரிகள்
உன்னை எப்படி மதிப்பார் சொல்லு?
உனக்கு மனைவி இருப்பின்
உன்னை இனி ஏற்பாளா சொல்லு?

சத்திரியன்

## மௌனத்தின் தேடல்- 565



## நீரின்றி உயிர்கள் ஏது!

நீரின்றி உயிர் இல்லையாகையால்
நீருமோ உயிரினங்களுக்குமே
நிச்சயமொன்றானதால்
நீரை எக்காலத்திலும் விரயமாக்கிடாது
நீர் வளம் பெருக்கிடும் முயற்சியுமோ
நன்கு வளர்ச்சி மேன்மை பெற்றிடனும்

தங்கத்தமிழன்,
காரைநகர்.

## நீர்க்குழாயும்...

நாட்டில் பசி பஞ்சம்
நலிந்தொடிந்த பொருளாதாரம்
ஆதாரம் ஏதுமின்றி நாடு
அல்லோலப்படுகிறது.
ஏட்டில் மட்டும் கட்டுப்பாட்டு விலை
இரக்கமற்றோர் எந்தளவும் பதுக்கி
பசி போக்காநிலை நீராகாரமாயும்
நிரப்பட்டும் வயிற்றை எனின்
நீர்க்குழாயும் நீர் பசியால்
இந்நிலையோ

பவானிசன்,
நல்லூர்.

## நலமாய் வாழ்க

வீதியோர நீர்க் குழாயில் நீர் அருந்தி தாகம்
தீர்க்கும் சிறுவனே வீதியில்
நல்லுள்ளத்தோடு நீர்க்குழாய் அமைத்து
இன்று உன் தாகம் தீர்க்கும்
அந்தப் புண்ணியவான்
உலகில் என்றும் குறையேதுமின்றி
நலமாய் வாழ்க!

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

## பெண்ணியம்

மனிதமுள்ள இவ்வுலகில்
இருளில் வாழ்க்கை எதற்கு- பெண்ணே!
வந்து விடு வெளியே
பெண்ணடிமை உடையட்டும்
வீட்டில் மட்டுமல்ல இவ்வுலகிலிருந்தும்.
ஆண்களை மையமிட்டே
அதிகாரமுள்ள இவ்வுலகில்
புரட்சிப் பெண்ணாய் வா வெளியே!
பாரதி கண்ட புதுமைப் பெண்ணல்லவா- நீ
போகப் பொருளாய்க் கருதும்
எம்மவர் முன் -நீ
சிங்கப்பெண்ணாய் வலம் வா பெண்ணே!
விதை மனதில் புரட்சி விதையை அது போதும்
இனி பெண்ணினம்
காற்றில் ஏறி விண்ணையும் சாடும்.

எஸ்.ஈகன்
([illegible])

## மௌனத்தின் தேடல்- 566



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

ஏனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## கடலன்னை

அள்ளித்தரும் வள்ளல் நீ
பல வேளைகளில்...
கரை தொட்டு விளையாடும்
அலை கொண்டவள் நீ
வானம் தொடும் எல்லை
கொண்டவளோ?
என ஏங்க வைப்பவள் நீ
பால் நிலவின்
பொன் வண்ணச்சிதறல்களில்
தங்கமாய் ஜொலிப்பவள் நீ
சில வேளைகளில்
சீற்றங் கொள்கிறாயே?
அமைதியாய் இருக்கின்ற
பொழுதுகளில் அழகானவள் நீ...

தி.திருமாலினி, சங்கத்தானை.

## குடிப்பதற்கு...

பார் விளைக்கும் விவசாயிக்கு
பருவத்தே மழை இல்லை மேலும்
கார் பொழிந்து அறுவடையை
கதிர் நனைய வைக்கிறது காலம்
கதிகாலம் மானுடரின் நீதியற்ற
கருமங்கள் இயற்கைதனை இனும்
இரக்கமற்ற செயன் முறையால்
குடிப்பதற்கு நீரின்றி குழாய் அழுகிறது.

கார்வண்ணன்,
காவலூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மித்திரபேதம்

# கடல் புறா

இதை நினைப்பில் வைத்துக் கொள்ளுங்கள். இங்கு பலவர்மன் ஆதிக்கம் ஒழிந்து என் ஆதிக்கம் நிலைக்க வழிவகுக்கும் பொறுப்பை எனக்கு விட்டுவிடுங்கள்.

அமீர் பதிலேதும் சொல்லவில்லை. கண்டியத்தேவன் மட்டும் சொன்னான். "எப்படியும் நாம் இங்கு தங்கித்தான் ஆகவேண்டும். நமது மரக்கலம் மீண்டும் கடலில் நீண்ட தூரம் பயணம் செய்யமுடியாது. அதைப் பழுது பார்க்க அவசியமிருக்கிறது." என்று.

அக்ஷயமுனையில் தங்குவதற்கு அமீருக்கு ஏதாவது ஆட்ஷேபனையிருந்தால் அது கண்டியத்தேவன் பேச்சுடன் நின்றுவிட்டது. ஆகவே அடுத்து செய்ய வேண்டியது என்னவென்பதை அறிய அவன் கருணாகரனை நோக்கித் தன் பெருவிழிகளைத் திருப்பினான். கருணாகர பல்லவனின் கட்டளைகள் திட்டமாயிருந்தன. "சேந்தா! நமது பொக்கிஷப் பெட்டிகளில் நகைகளும் சிறந்த குறுவாள்களும் வேறு ஆயுதங்களும் எத்தனை இருக்கும்?" என்று வினவினான் இளையபல்லவன், தன் கட்டளையை இடுமுன்பு.

"பாலித் தீவில் தங்களுக்குக் கிடைத்த பொக்கிஷத்தைத் தவிர அவ்வப்பொழுது அகூதா கொடுத்ததே இரண்டாயிரம் பேருக்கு வழங்கலாம். நான்கு பெட்டி நகைகள் இருக்கின்றன. இரண்டு பெட்டி பட்டாடைகள், இரண்டு பெட்டி விலை உயர்ந்த ஆயுதங்கள் இருக்கின்றன. எல்லாம் பல இலட்சம் பொற்காசுகள் பெறும்" என்றான் கூலாவாணிகள் சேந்தன்.

"அவற்றில் ஒரு பெட்டி நகைகளையும், ஒரு பெட்டி பட்டாடைகளையும் கரைக்குக் கொண்டு சென்று கொள்ளைக் கூட்டத்தாருடன் இருக்கும் பெண்களுக்கு வழங்கிவிடு. அமீரையும் அழைத்துப் போ. தகுதிக்குத் தக்கபடி ஆபரணங்களைக் கொடு. கொள்ளைத் தலைவர்களுக்கு குறுவாள்களைப் பரிசாக அளி. இரவு நாட்டியத்தின்போது அவர்கள் அழகு என் கண்களைப் பறிக்க வேண்டுமென்று பெண்களிடம் சொல்," என்று உத்தர விட்டான் கருணாகர பல்லவன்.

அமீரும், சேந்தனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். உணவை முடித்துக் கொண்ட இளைய பல்லவன் அவர்கள் யாரையும் கவனிக்காமல், எழுந்து அறையை விட்டுத் தளத்துக்குச் சென்றான். அமீரும் சேந்தனும் ஏதோ ஆழ்ந்த யோசனையுடன் இளைய பல்லவன் நடந்து கொள்கிறானென்பதை மட்டும் புரிந்து கொண்டார்களேயொழிய அது என்னவாயிருக்கக்கூடும்.

என்பதை மட்டும் அறிய அவர்களால் முடியவில்லை ஆகவே சொன்னபடி உத்தரவை நிறைவேற்றுவதில் முனைந்தார்கள். அடுத்த சில நாழிகைகளுக்கெல்லாம் பெரும் மரப் பெட்டிகளிரண்டு கப்பலிலிருந்து படகில் இறக்கப்பட்டுக் கரையை நோக்கி விரைந்தன. மீண்டும் படகு வருவதைக் கவனித்தும் ஆரவாரத்துடன் ஓடி வந்த கொள்ளைக் கூட்ட ஆண்களும் பெண்களும் அமீரும் சேந்தனும் வழங்கிய பரிசுகளைப் பெற்று நானாவிதமாக மகிழ்ச்சி கூச்சலிட்டனர். கப்பலின் தளத்தில் நின்று தங்களைக் கவனித்துக் கொண்டிருந்த இளைய பல்லவனை நோக்கிக் கைகளை ஆட்டிக் கூச்சலிட்டு நன்றி தெரிவித்தனர். பட்டாடைகளைச் சிலர் விசிறி ஆகாயத்திலெறிந்து பிடித்தார்கள். சில அழகிகள் முத்து மாலைகளைக் கொண்டையில் வைத்து அழகு பார்த்தார்கள். கடற்கரையில் சூரியனின் மிதமிஞ்சிய வெப்பத்திலும் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. அதைக் கண்டு புன்முறுவல் செய்த இளையபல்லவன் மிகுந்த திருப்தியுடன் தன் அறைக்கு மீண்டான். மீண்டவன் பஞ்சனையில் படுத்து நன்றாக உறங்கினான். அதிக களைப்பால் நீண்ட நேரம் உறங்கி விட்ட அந்தத் தமிழகப் படைத் தலைவன் மஞ்சள் வெயில் அடிக்கத் தொடங்கிய சமயத்திலேயே கண் விழித்து மறுபடியும் தளத்துக்கு வந்து கடற்கரையை நோக்கினான். நோக்கியவன் நோக்கிக் கொண்டே நின்றான். கண்களை இருமுறை கசக்கிப் பார்த்தான். கடற்கரை பழைய கடற்கரையாயில்லை. அங்கிருந்த குடிசைகள் மாயமாய் மறைந்து விட்டன. இருப்பது அக்ஷயமுனையே அல்லவென்று தோன்றியது. அவனுக்கு பிரமிப்பு அவன் முகத்தில் மேலும் மேலும் படர்ந்தது.

## புது நகரம்

மாலை வேளையில் மஞ்சள் வெயிலில் கடற்கரை மணற்பகுதியில் கண்ணுக்கெதிரே விரிந்த அந்த அற்புதக் காட்சி இளையபல்லவன் கண்களை மட்டுமின்றி மனத்தையும் பறித்து மயக்கி அவனுக்குப் பிரமை பிடிக்கும்படி செய்துவிட்டதால் நீண்ட நேரம் மரக்கலத்தின் தளத்தின் மேலேயே நின்று கொண்டிருந்தான்.

உச்சிவேளை தாண்டி இரண்டு நாழிகைகளுக்குப் பிறகே தான் உறங்கச் சென்றதை நினைத்துப் பார்த்த சோழர் படைத்தலைவனுக்கு தான் உறங்கி எழுந்த சொற்ப காலத்திற்குள் அத்தனை பெரிய அற்புதம் கடற்கரையில் எப்படி விளைய முடியும் என்பது மட்டும் விளங்கவில்லையாதலால் அவன் கண்களிலும் முகத்திலும் விபரிக்க இயலாத வியப்பே மிதமிஞ்சி நின்றது. உச்சிவேளை அகன்ற இரண்டு நாழிகைகளுக்கும் கதிரவன் மலைவாயில் விழ முற்பட்டு மஞ்சள் வெயில் எங்கும் வீசத் தொடங்குவதற்கும் இடையே இருந்தது ஒரு ஜாமம் சொச்சமே என்பதைக் கணக்குப் போட்ட இளையபல்லவன் கடற்கரையில் நிகழ்ந்தது.

உண்மையில் இந்திர ஜாலம் தான் என்ற முடிவுக்கு வந்தான் தூரத்தே அக்ஷயமுனையில் பெரும் கோட்டை மட்டும் அவன் கண்களுக்குப் புலனாகாதிருந்ததால் தான் இருப்பது அக்ஷயமுனையல்ல என்ற முடிவுக்கே அவன் வந்திருப்பான். அப்படிப் பிரமிக்கத் தக்க வண்ணம். பார்த்தாலொழிய நம்ப முடியாத அற்புத நகரமொன்று கடற்கரை மணலில் எழுந்திருந்தது.

கடற்கரை மணலில் கோட்டைச் சுவரை அடுத்திருந்த குடிசைகளை அடியோடு மறைத்துப் பெரும் மண்டபமொன்றும் மற்றும் பல தூண்களும் ஆங்காங்கு எழுந்து நின்று பழையகால யவன நகரங்களின் பிரவேச ஸ்தூபிகளைப் போல் காட்சியளித்தன.

நேராகக் கடலை நோக்கி அமையாமல் மேற்கு நோக்கி பகிட்பாரிஸான் மலைத் தொடரைப் பார்த்தவண்ணம் அமைந்திருந்த பெரு மண்டபத்தின் தூண்கள் ஆகாயத்தை அளாவி நின்றன. கீழேயும் பலகைகளால் தைக்கப்பட்ட மேடை இருந்தது.

ஆனால் மேலே எந்த மறைவும் இல்லை. ஆகாயமே கூரையாக அமைந்திருந்த அந்தப் பெரும் மண்டபம் மஞ்சள் வெயிலில் ஜாஜ்வல்யமாகக் காட்சியளித்தது. அதன் வலுவான தூண்களில் விதவிதமான வண்ணச் சித்திரங்கள் தீட்டப்பட்டிருந்தன.

மண்டபத்தின் பக்கப் பகுதிகள் இரண்டை மட்டும் பலவித ஓவியங்களை உடைய திரைச்சீலைகள் மறைந்திருந்தன. அந்தப் பெரும் திரைச் சீலைகள் கடற்காற்றில் படபடத்து எழுந்து எழுந்து தாழ்ந்து இளைய பல்லவனை வா! வா! என்று அழைத்தன.

அந்த மண்டபத்திற்குப் பத்தடி தூரம் தள்ளித் தள்ளி நானாவிதமான ஸ்தம்பங்கள் ஆங்காங்கு எழுந்து கொண்டிருந்தன. மயன் சிருஷ்டித்தது போல் திடீரென ஒரு நகரமே அந்தக் கடற்கரையில் உதயமாகி விட்டதையும் ஸ்தம்பங்களின் வேலை அதி துரிதமாக நடப்பதையும் பார்த்த இளையபல்லவன் அக்ஷயமுனைக் கோட்டைத் தொழிலாளிகளின் சுறுசுறுப்பை எண்ணிப் பெரிதும் வியந்தான். தச்சர்களும் கொல்லர்களும் செய்து கொண்டிருந்த வேலையால் எழுந்த உளி, ரம்பம், வாள் இவற்றின் சத்தம் எங்கும் பரவி காதைப் பிளந்து கொண்டிருந்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : ரயில் பயணங்கள்
இயற்றியவர் : டி.ராஜேந்தர்
இசை : விஜய டி.ராஜேந்தர்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



வசந்த ஊஞ்சலிலே அசைந்த பூங்கொடியே
உதிர்ந்த மாயம் என்ன
உன் இதய சோகம் என்ன
உன் இதய சோகம் என்ன

நூலுமில்லை வாலுமில்லை
வானில் பட்டம் விடுவேனா
நாதி இல்லை தேவி இல்லை
நானும் வாழ்வை ரசிப்பேனா
நானும் வாழ்வை ரசிப்பேனா
நூலுமில்லை...

நினைவு வெள்ளம் பெருகி வர
நெருப்பெனவே சுடுகிறது
படுக்கை விரித்து போட்டேன்
அதில் முள்ளாய் அவளின் நினைவு
பாழும் உலகை வெறுத்தேன்
அதில் ஏனோ இன்னும் உயிரு (2)

மண்ணுலகில் ஜென்மம் என
என்னை ஏனோ இன்று வரை விட்டு வைத்தாய்
கண்ணிரண்டில் காட்சி கோடி இன்னும் வைத்து
கண்ணீரை பிழிந்தெடுத்தாய்
இறைவா கண்ணீரை பிழிந்தெடுத்தாய்
நூலுமில்லை....

நிழல் உருவில் இணைந்திருக்க
நிஜம் வடிவில் பிரிந்திருக்க
பூத்தால் மலரும் உதிரும்
நெஞ்சில் பூத்தால் உதிரவில்லை
நிலவும் தேய்ந்து வளரும்
அவள் நினைவோ தேய்வதில்லை (2)

காடுதன்னில் பாவி உயிர் வேகும் வரை
பாவை உன்னை நினைத்திடுவேன்
பாடையிலே போகையிலும்
தேவி உன்னை தேடி உயிர் பறந்திடுமே
உறவை தேடி உயிர் பறந்திடுமே

நூலுமில்லை வாளுமில்லை
வானில் பட்டம் விடுவேனா
நாதி இல்லை தேவி இல்லை
நானும் வாழ்வை ரசிப்பேனா ஆ ஆ
நானும் வாழ்வை ரசிப்பேனா ஆ ஆ
நானும் வாழ்வை ரசிப்பேனா

# எட்டிப் பிடிக்கும் எடப்பாடி...

# இருப்பதை இழக்கும் பன்னீர்!

'இப்போ நடக்கும், அப்போ நடக்கும்' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த அ.தி.மு.க. உட்கட்சி மோதல் வெளிப்படையாகவே வெடித்து விட்டது.

ஜெ. படத்துடன் எடப்பாடியும் பன்னீரும் இருக்கும் போட்டோவை பொக்கெட்டில் வைத்து சுற்றிக்கொண்டிருந்த ரத்தத்தின் ரத்தங்கள் இப்போது அணி பிரிந்து விட்டனர். ஜெயலலிதாவின் மரண த்தைத் தொடர்ந்து மூன் றாவது முறையாகத் தமிழ் நாட்டின் முதல்வராகும் வாய்ப்புக் கிடைத்தது ஓ.பன்னீர்செல்வத்துக்கு.

ஆனால், சசிகலாவின் முதல்வர் கனவால், 'கைக்குக் கிடைத்தது வாய்க்கு எட்டலை' என்ற ஆவேசத்தில் தர்மயுத்தத் தைத் தொடங்கினார் பன்னீர்செல்வம். மறுபுறம், நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக சசிகலா சிறைக்குச் செல்ல, யாருமே எதிர்பாராமல் முதல்வரானார் எடப்பாடி பழனிசாமி.

ஜெயலலிதாவால் இரு முறை முதல்வராக முன்னிறுத்தப்பட்டதால் பன்னீர் செல்வத்தைத் தமிழகத்துக்குத் தெரியும். ஆனால் கட்சியில் எங்கோ ஒரு மூலையில் இருந்த எடப்பாடி திடீர் முதல்வராக, இரண்டு அணிகள் உருவாயின.


எடப்பாடி தலைமையிலான ஆட்சிக்கு எதிரான தீவிரமான பிரசாரங்களைத் தமி ழகமெங்கும் முன்னெடுத்தார் பன்னீர் செல்வம். ஆனால் ஒருகட்டத்தில் அணிகள் இணைப்புக்கான பேச்சுவார்த்தைகள் தீவிரமாக முன்னெடுக்கப் பட்டன. பன்னீர் தரப்பு முதல்வர் இருக்கையை எவ்வளவு கேட்டும் எடப்பாடி தரப்பு விட்டுத் தரவேயில்லை. கடைசியில் 'எனக்கு ஆட்சி, கட்சிக்கு நீங்கள்' எனப் பேசி முடிக்கப்பட்டது. ஆனாலும், கட்சியிலும் இருவரும் கையெழுத்திடும் வகையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. ஒரு அதிகாரமும் இல்லாத துணை முதல்வர் பதவி பன்னீருக்குத் தரப்பட்டது. எடப்பாடி ஆட்சி இன்னும் மூன்று மாதத்தில் கலைந்து விடும். ஆறு மாதத்தில் காணாமல் போய்விடும் என ஏராளமான ஆரூடங்கள் சொல்லப்பட்டன. ஆனால், கட்சியிலும் ஆட்சியிலும் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை மட்டுமே முன்னிறுத்தும் வேலைகளை ஆரம்பம் முதலே மிகத் தீவிரமாகச் செய்து வந்தார் எடப்பாடி.

ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கே மாதத்தில், தன்னை முதல்வராக்கிய சசிகலாவுக்கு செக் வைக்க பன்னீர் அணியைத் தன்னோடு இணைத்துக்கொண்டதில் தொடங்குகிறது எடப்பாடியின் அரசியல் விளையாட்டு.

ஆட்சியைத் தக்கவைக்க, மாநிலத்திலும் மத்தியிலும் யாரையெல்லாம் சரிக்கட்ட வேண்டுமோ அத்தனை பேரையும் சரிக்கட்டி நான் காண்டுக் காலத்தையும் வெற்றிகரமாகக் கடந்தார் எடப்பாடி பழனிசாமி.

பல வாய்ப்புகளைக் கைவிட்ட பன்னீருக்குக் கடைசி வாய்ப்பாக இருந்தது சமீபத்தில் நடந்து முடிந்த உட்கட்சித் தேர்தல். மாவட்டச் செயலாளர், ஒன்றியச் செயலாளர் பதவிகளை தன் ஆதரவாளர்களுக்குக் கேட்டுப் பெற்றிருந்தால்,

இப்போது பொதுக்குழு வைத் தள்ளிவைக்க வேண்டும் எனக் கெஞ்சும் நிலை பன்னீருக்கு ஏற்பட்டிருக்காது. இப்போதிருக்கும் மாவட்டச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்களில் பெரும் பாலானவர்கள் எடப்பாடி பழனிசாமியின் ஆதரவாளர்கள். பொதுக் குழுவுக்கு இரண்டு பேர் சேர்ந்து அழைக்க வேண்டும். அதற்கான கையெழுத்தை பன்னீர் போட்டு விட்டார். சிறப்பு அழைப்பாளர்களை அழைக்க வேண்டாம் என்பதற்கும் ஒப்புதல் கொடுத்து விட்டார்.




இனி பன்னீர் பொதுக் குழுவுக்கு வராமல் புறக்கணித்தாலும் கூட பெரும்பான்மை ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்படும் என்கிறது கட்சி வட்டாரம். இந்த முறை விட்டுக்கொடுக்க வாய்ப்பே இல்லை என பன்னீர் கங்கணம் கட்டிக் கொண்டு நின்றாலும், தும்பை விட்டு வாலைப் பிடித்த கதை என்கிற சொல்லடை நிச்சயமாக தமி ழக அரசியலில் அவருக் குத் தான் பொருந்தும். ஜெயலலிதாவுக்குக் குனிந்து, சசிகலாவுக்குப் பணிந்து வாழ்ந்த பன்னீர் இனி எடப்பாடிக்கும் தணிந்து போவாரா, தர்மயுத்தத்தை வீரியமாக ஆரம்பிப்பாரா? என்பதை வரும் வாரம் சொல்லிவிடும்.

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதன் திரைவிமர்சனம்



தேனீ மாவட்டம் பண்ணைபுரத்தில் ஆட்டோ ஓட்டுநராக இருக்கும் நாயகன் விஜய்சேதுபதி, மனைவி காயத்ரி, மகன், மகளுடன் வாழ்ந்து வருகிறார். விஜய்சேதுபதி தனது குழந்தைகளை பெரிய ஸ்கூலில் சேர்த்து படிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். இந்நிலையில் அதிக பணத்திற்கு ஆசைப்பட்டு ஆட்டோ ஓட்டுவதை விட்டு, ரியல் எஸ்டேட் புரோக்கராக மாறுகிறார். இவரை ஊர் மக்கள் அனைவரும் நம்பி முதலீடு செய்கிறார்கள். நிலத்தை பதிவு செய்யும் நிலையில் ரியல் எஸ்டேட் அதிபர் அனைவரையும் ஏமாற்றி விட்டு சென்று விடுகிறார்.

இதனால் ஊரில் மானம் மரியாதை இழக்கிறார் விஜய்சேதுபதி. மேலும் இவரை பொலிஸ் தேட ஆரம்பிக்கிறது. இதிலிருந்து தப்பிக்க வீடு, குழந்தை, மனைவியை விட்டு ஓடி விடுகிறார். இறுதியில் விஜய்சேதுபதி, மனைவி ,குழந்தைகளுடன் சேர்ந்து வாழ்ந்தாரா? விஜய்சேதுபதியின் வாழ்க்கை என்ன ஆனது? என்பதே படத்தின் மீதிக்கதை. படத்தில் நாயகனாக நடித்திருக்கும் விஜய்சேதுபதி, அன்பு, பாசம் அக்கறை கொண்ட நடுத்தர வர்க்க மனிதனாக நடித்திருக்கிறார். கோபத்தை அடக்குவது, பின்னர் வெளிப்படுத்தும் விதம் என நடிப்பில் பளிச்சிடுகிறார்.

இவருக்குப் போட்டியாக நடித்து அசத்தி இருக்கிறார் காயத்ரி. கணவர் மீது அக்கறை, பிள்ளைகள் மீது பாசம், ஊர் மக்களின் பேச்சை சமாளிப்பது என நடிப்பில் ஸ்கோர் செய்திருக்கிறார். கிளைமாக்ஸ் காட்சியில் கண்கலங்க வைக்கிறார். விஜய்சேதுபதியின் நண்பராக வரும் குருசோம சுந்தரம் நடிப்பில் கவனிக்க வைத்திருக்கிறார். கடினமான காட்சிகளை சாதாரணமாக நடித்து விட்டு செல்கிறார். மற்ற கதாபாத்திரங்கள் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து இருக்கிறார்கள். சாதாரண மனிதனின் வாழ்க்கையில் நடக்கும் யதார்த்த நிலையை அப்படியே படமாக்கி இருக்கிறார் இயக்குநர் சீனு ராமசாமி. கதாபாத்திரங்களிடையே சிறப்பாக வேலை வாங்கி இருக்கிறார். குடும்பத்திற்காக தியாகம் செய்யும் மனிதன் மாமனிதன் என்று சொல்லியிருக்கிறார் இயக்குநர். தனக்கே உரிய பாணியில் படத்தை கொடுத்து இருக்கிறார் சீனு ராமசாமி.

மெதுவாக நகரும் திரைக்கதை படத்திற்கு பலவீனமாக அமைந்து இருக்கிறது. இளையராஜா மற்றும் யுவன் சங்கர் ராஜா இசையில் பாடல்கள் அனைத்தும் ரசிக்கும் படியாக உள்ளது. குறிப்பாக "நினைத்தது ஒன்று... நடந்தது ஒன்று" என்ற பாடல் தாளம் போட வைக்கிறது. சுகுமாரியின் ஒளிப்பதிவு கண்களுக்கு விருந்து படைத்து இருக்கிறது. மொத்தத்தில் "மாமனிதன்" சிறந்தவன்.

## நகைச்சுவை நடிகை மனோரமா




மனோரமா (26 மே 1937 - 10 அக்டோபர் 2015) தென்னிந்தியத் திரைப்பட நடிகை ஆவார். நகைச்சுவைக் கதாபாத்திரங்களில் தனது திறனை வெளிப்படுத்திய இவர் 1500 திரைப்படங்களுக்கு மேல் நடித்தார். இவர் தமிழ்த் திரையுலகினராலும், தமிழ்த் திரைப்பட ரசிகர்களாலும் "ஆச்சி" என அன்போடு அழைக்கப்பட்டார்.

இவர் தென்னிந்தியாவின் ஐந்து முதலமைச்சர்களுடன் நடித்த பெருமை கொண்டவர். கா. ந. அண்ணாதுரை, மு. கருணாநிதி ஆகிய இருவரும் நாடக மேடைகளில் மனோரமாவுடன் நடித்திருக்கிறார்கள். இவர்களைத்தவிர ம. கோ. இராமச்சந்திரன் மற்றும் செ. ஜெயலலிதா இவருடன் தமிழ்த் திரைப்படங்களில் நடித்திருக்கிறார்கள். மேலும் என். டி. ராமராவ் தெலுங்கு படங்களில் இவருடன் நடித்திருக்கிறார் .மனோரமாவின் இயற்பெயர் கோபிசாந்தா. இவர் காசியப்பன் "கிளாக்கு டையார்" மற்றும் ராமாமிர்தம் ஆகியோருக்கு மகளாக பிறந்தார். மனோரமா தமிழ்நாடு மாநிலத்தில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ராஜமன்னார்குடியில் வசதியான குடும்பத்தில் பிறந்தார். இவரின் தந்தை ஒரு சாலை ஒப்பந்தக்காரராகப் பணியாற்றியவர். தந்தை காசியப்பன் கிளாக்குடையார் மனோரமாவின் தாயார் ராமாமிர்தம் அவர்களின் தங்கையை இரண்டாம் தாரமாகத் திருமணம் புரிந்ததால். இதனை அடுத்து கணவருடன் ஏற்பட்ட மனகசப்பால் புறக்கணிக்கப்பட்ட ராமாமிர்தம் அம்மாள் மனோரமவை அழைத்து கொண்டு காரைக்குடி அருகே உள்ள பள்ளத்தூர் என்ற ஊருக்கு குடி பெயர்ந்தார். மனோரமாவை ஆறாம் ஆம் வகுப்பு வரை படிக்க வைத்தார். குடும்ப வறுமையின் காரணமாக பள்ளி படிப்பை தொடர முடியாத மனோரமா அங்குள்ள செட்டியார் வீடுகளில் வேலையாளியாக பணி செய்தும் அவர்கள் தாயாருடன் பலகார வியாபாரம் செய்தும் வாழ்க்கையைத் தொடங்கினார்கள். தனது பன்னிரெண்டாவது அகவையில் நடிப்புத் தொழிலில் இறங்கினார்.

"பள்ளத்தூர் பாப்பா" என சிறு வயதில் மனோரமா செல்லமாக அழைக்கப்பட்டார். நாடக இயக்குநர் திருவேங்கடம், ஆர்மோனியக் கலைஞர் தியாகராஜன் ஆகியோர் இவருக்கு "மனோரமா" எனப் பெயர் சூட்டினர்.1000 திரைப்படங்களுக்கு மேல் நடித்ததற்காக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றார்.

மனோரமா தனது 78 ஆவது அகவையில் 2015 அக்டோபர் 10 அன்று இரவு 11:00 மணியளவில் மாரடைப்பால் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் காலமானார்.

## விஜயின் வாரிசு




'பீஸ்ட்' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து 'தோழா' உள்ளிட்ட படங்களை இயக்கிய வம்சி 'பைடிப்பள்ளி 'இயக்கும் படத்தில் விஜய் நடித்து வருகிறார். இப்படம் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் நேரடியாக வெளியாக உள்ளது.கடந்த ஜூன் 22 ஆம் திகதி நடிகர் விஜய் தனது 48 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவர் நடிக்கும் அடுத்த படமான 'வாரிசு' படத்தின் மூன்று போஸ்டர்கள் வெளியாகின.

குழந்தைகள் சூழ விஜய் படுத்துக்கொண்டு இருக்கும் புகைப்படத்தை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர். 'வாரிசு' படத்தின் மூன்றாவது போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. அதில் விஜய் பைக்கில் அமர்ந்து கொண்டிருப்பது போன்ற புகைப்படம் வெளியாகியுள்ளது. தற்போது இந்த போஸ்டர் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தின் அதிசயங்கள் - பகுதி 1

## காஞ்சிபுரம் கோவில்கள்

சைவ, வைணவர்கள் மட்டுமின்றி பௌத்தம் தழைத்திருந்த காலத்தில் அவர்களுக்கும் புனித தலமாக விளங்கிய நகரம் காஞ்சிபுரம். சிவத்தலங்கள் 1008ம், வைணவத்தலங்கள் 108 ம் இருந்ததாக சொல்லப்படுகிறது. ஆனால் இன்று பெரும்பாலனா ஆலயங்கள் அங்கு இல்லை. இயற்கையின் சீற்றங்கள், அந்நியர்களின் ஆக்கிரமிப்பு, பராமரிப்பு இல்லாமை ஆகிய காரணங்களால் அவை அழிந்து போயிருக்கலாம்.

காமாட்சி அம்மன் ஆலயம், ஏகாம்பரேஸ்வரர் ஆலயம், கைலாசநாதர் கோவில், வரதராஜ பெருமாள் ஆலயம், பவளவனர் ஆலயம், திருப்புட்கழி ஆலயம் ஆகியன அவற்றின் பல்லவர் பாணிச் சிற்பங்களுக்காக வரலாற்று ஆய்வாளர்கள் சிற்பக்கலை நிபுணர்கள் மத்தியில் புகழ் பெற்றவை. கருட புராணத்தின்படி முக்தி தரும் தலங்களில் ஒன்றாக இந்துக்களால் வணங்கப்படுகின்ற நகரம் காஞ்சிபுரம்.

## குற்றால அருவிகள்

குறு ஆல் என்கிற ஒருவகையான ஆலமரங்கள் நிறைந்த பகுதி என்பதால் குற்றாலம் என்று பெயர் ஏற்பட்டதாக சொல்வார்கள். சலன மற்றும் அமைதியாகவும் ஓடிக்கொண்டிருக்கும் நீர் இங்கு மட்டும் குழந்தைகள் போல குதித்து கும்மாளமிடுகிறது. சிற்றாறு, மணிமுத்தாறு, தாமிரபரணி ஆகியவற்றின் பிறப்பிடமாக விளங்கும் குற்றாலம், தென்காசியிலிருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது.



சிறியதும் பெரியதுமாக ஒன்பது அருவிகள் இங்கு கொட்டுகின்றன. திரிகூட மலையின் உச்சியிலிருந்து 40 அடி உயரத்தில் உருவாகி சிற்றாற்றின் வழியாக 5 கிளைகளாக பிரிந்து விழுவதால் இதற்கு ஐந்தருவி என்று பெயர். ஐந்தருவியில் இருந்து 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது பழத்தோட்ட அருவி.

பேரருவி என்பதுதான் வழக்கமாக குற்றால அருவி என்று எல்லோராலும் அழைக்கப்படுவது. சுமார் 288 அடி உயரத்தில் பொங்கு மாங்கடல் என்னும் துறையில் விழுந்து, பரந்து விரிவது பேரருவி. பேரருவியிலிருந்து 2 கி.மீற்றர் தொலைவில் 30 அடி உயரத்தில் சிறிய மலைக்கு மேலே விழுவது செண்பகா அருவி யிலிருந்து மலைப்பகுதியில் மேலே சென்றால் தேனருவியைக் காணலாம். சுற்றிலும் தேனீக்கள் கூடுகட்டி இருப்ப தாலும் செல்லும் பாதை அடர்ந்த வனப்பகுதி என்பதாலும் அபாயகரமான பகுதியாகக் கருதப் படுகிறது. இவையல்லாமல் புலியருவி, பாலருவி, சிற்றருவி, பழைய குற்றால அருவி ஆகிய அருவிகள் உள்ளன.

## விவேகானந்தர் பாறை

சுவாமி விவேகானந்தர் தமிழகம் வந்த போது, கன்னியாகுமரியில் கடலின் உள்ளே அமைந்திருந்த பாறை ஒன்றைக் கண்டு வியந்து போய் அங்கு செல்வதற்கு விரும்பினார். அவரை அந்தப் பாறைக்கு அழைத்துச் செல்ல யாருமே முன்வராததினால் அவரே கடலை நீந்திக் கடந்து அந்தப் பாறையை அடைந்தார்.

(தொடரும்...)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2649

### பவனிதன்

அந்த பொண்ணு 98 மார்க் எடுத்து 2 கம்மியாருச்சேனு அழுதுட்டு இருக்கு... நீ 13 மார்க்க எடுத்து எப்புடிடா சிரிச்சுக்கிட்டு இருக்க? அந்த 13 மார்க் எப்டி எடுத்தேன்னு எனக்கே தெரியல சார்



### மதனப்பிரியா

காலில் புது ஷூ இல்லை.
புத்தம் புதிய யூனிபார்ம் இல்லை!
ஆனாலும் ஸ்கூல் போகும் இந்த முகங்களில் உள்ள சந்தோஷத்தை பாருங்கள்



### துளசிகா

பெற்றோல் காலியாகி பைக்க தள்ளிட்டு போகும் போதுதான்...



வேண்டாத சொந்தக்காரன் எவனாவது எதிர்ல வருவான்.

### தனுசன்

ரெண்டு ஆம்பளைங்க கூடி பேசினா ஏதோ பிரச்சினை நடந்திருக்குனு அர்த்தம்.
அதே ரெண்டு பொம்பளைங்க கூடி பேசினா ஏதோ பிரச்சினை நடக்கப் போகுதுனு அர்த்தம்...!

### ஜெனுசா

எதுவும் சாப்பிட கிடைக்காத என் பெற்றோர்கள்
எது கிடைத்தாலும் சாப்பிட்ட நாங்கள்
எது கிடைத்தாலும் சாப்பிடாத எம் குழந்தைகள்

- தலைமுறை-



### கிருஷ்ணா

உழைக்காமல் வாழ்பவர்களை
விட வாழாமல் உழைப்பவர்களே
இங்கு அதிகம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவைகளை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
# சுகமான விடியல்
296
வலம்புரியின் மருத்துவச்சுடர்

## எந்த எண்ணெய் பாதுகாப்பானது?

சமையலுக்குபாவிக்கப்படும்எண்ணெய் வகைகளில்எது பாதுகாப்பானது என்பது சம்பந்தமான புரிதலில் ஒரு பெரும் குழப்பநிலை காணப்படுகிறது.


நல்லெண்ணெய் நல்ல எண்ணெயா தேங்காய் எண்ணெயை பாவிக்கலாமா? ஒருமுறை பொரித்த எண்ணெயைவெளியே ஊற்றுவதா? இது கட்டுப்படியாகுமா? உடல் நிறையை குறைப்பதற்கு எந்த எண்ணெய் பொருத்தமானது. மீன் எண்ணெய் குளிசைகளை பாவிப்பது பயன்தருமா? தாவரக்கொழுப்பு, விலங்கு கொழுப்பு என்பவற்றின் வேறுபாடுகள் என்ன? என்பது சம்பந்தமான ஒரு தெளிவு பயனுடையதாக அமையும்.

பொதுவாக எல்லா வகையான எண்ணெய்களையும் அளவுடன் பாவிப்பது பாதுகாப்பானது. எண்ணெய் சேர்த்து வதக்கி எடுக்கும் சமையலுக்கு நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் என்பன சிறந்தவை.

ஆனால்வடை,றோல்ஸ்,பற்றீஸ் போன்ற பொரித்தெடுக்கும் உணவுகளை தயாரிப்பதற்கு இந்த எண்ணெய் வகைகள் சிறந்தவை அல்ல.இந்த எண்ணெய் வகைகளை கொதிக்க வைக்கும் பொழுது அவை 'ராண்ஸ்' கொழுப்பாக மாற்றமடைகின்றன. இந்த 'ராண்ஸ்' கொழுப்பு உடல் நலத்துக்கு பாதுகாப்பானது அல்ல.

பொரித்து எடுக்கும் இந்த உணவு வகைகளைதயாரிப்பதற்குதேங்காய் எண்ணெய் சிறந்தது. தேங்காய் எண்ணெயை கொதிக்கவைக்கும் பொழு தும் அது 'ராண்ஸ்' கொழுப்பாக மாற்றமடையாது.இதனால் பொரித்த தேங்காய் எண்ணெயை 2ஆம் 3ஆம் முறை பொரிப்பதற்கு பாவிப்பதும் பெரிய பாதிப்பு எதனையும் ஏற்படுத்த மாட்டாது.

இதனால் ஒரு தடவை பொரித்த தேங்காய் எண்ணெயை வெளியே ஊற்றவேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் போன்றவற்றை பொரிப்பதற்கு மீண்டும் மீண்டும் பாவிப்பது பாதுகாப்பானது அல்ல. அனைத்து எண்ணெய் வகைகளுக்கும் உடல்நிறையை அதிகரிக்கும் தன்மை காணப்படுகிறது.




எனவே உடல்நிறையை குறைக்க விரும்வோர் அனைத்து வகையான எண்ணெய்களையும் குறைத்துக் கொள்வது நல்லது.

பொதுவாக விலங்கு கொழுப்புடன் ஒப்பிடும்பொழுது தாவரக்கொழுப்புகள் பாதுகாப்பானவை என ஆராய்ச்சிகள் உறுதி செய்கின்றன.

உடல்நலத்தை மேம்படுத்துவதற்கு மீன்எண்ணெய் குளிசை வகைகளோ அல்லது ஒமேகா-3 வகை குளிசைகளோ பெரிய அளவில் உதவப் போவதில்லை என்றும் ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

எனவே அதிகவிலை கொடுத்து இந்த வகையான குளிசைகளை வாங்கி பயன்படுத்துவது பயனற்றது .

இறக்குமதியாகி அதிக விலையில் விற்பனையாகும் மரக்கறிஎண் ணெய் வகைகளிலும் பார்க்க எமது பகுதியில் உற்பத்தியாகும்தேங்காய் எண்ணெய் பாதுகாப்பானது.

உலகளாவிய அளவில் பயிரிடப்படும் சூரியகாந்தி செடிகளிலிருந்து இவ்வளவு பெருந்தொகையான சூரியகாந்தி எண்ணெயை உற்பத்தி செய்வது நடைமுறைச் சாத்தியமானது அல்ல.

உலகளாவிய அளவிலே பயிரிடப்படும் சூரியகாந்தி பயிர்களை கருத்தில்கொண்டால் அவற்றிலிருந்து பெறப்படக்கூடிய எண்ணெய் தற்பொழுது சூரியகாந்தி எண்ணெய் என்று சொல்லி விற்பனையாகும் எண்ணெயின் காற்பங்கு எண்ணெயை கூட உற்பத்தி செய்வது நடைமுறைச் சாத்தியமானது அல்ல.

எனவே இங்கு விற்பனையாகும் சூரியகாந்தி எண்ணெய் வகைகளின் தூய்மைத் தன்மை நிச்சயமற்றதாக காணப்படுகிறது.எண்ணெயை ஊற்றி வதக்கி எடுத்து பிரட்டும் உணவு வகைகளிலே பொரித்து வடித்து எடுக்கும் உணவு வகைகளிலும் பார்க்க எண்ணெய்செறிவு அதிகமாக காணப்படுகிறது.

குறைந்தளவு எண்ணெயை பாவித்து சுவையான உணவு வகைகளை தயாரிக்கும் முறைகளை அறிந்திருப்பது பயனுடையதாக அமையும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

## ஒட்சிசனை உருவாக்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலை

பசுமையான மரங்கள் ஒவ்வொன்றும் நித்தமும் பல்லாயிரக்கணக்கான லீற்றர் ஈரலிப்பான ஒட்சிசனை உருவாக்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளாக விளங்குகின்றன.

அத்துடன் நாம் வெளி விடும் அசுத்தக் காற்றை உள்ளெடுத்து சுத்திகரிக்கும் வடிகட்டிகளாகவும் தொழிற்படுகின்றன. சுற்றாடலின் வெப்பநிலையைக் குறைத்து சூழல் வெப்பநிலையை மனிதன் சுகமாக வாழக்கூடிய ஒரு வெப்பநிலையில் சீர் செய்து வைக்கும் ஒரு வெப்பநிலை சீராக்கியாகவும் இந்த மரங்கள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தாவரங்களில் துளிர்த்து வரும் குருத்துக்களும், பசுமையும், குளிர்ச்சியும், நிழலும் அதன் மலர்களும் மனித மனங்களுக்கு புத்துணர்ச்சியையும் அமைதியையும் அள்ளி வழங்குகின்றன. மாதம் மும்மாரி பொழியாவிட்டாலும் போதுமான அளவு மழை வீழ்ச்சிகிடைப்பதற்கும் எமது தண்ணீர்த் தேவையை நிவர்த்திப்பதற்கும் மரங்கள் இன்றியமையாதவை என்பதும் மரம் இன்றி மழை இல்லை என்பதும் எமக்குத் தெரியும். எமக்கு உணவுப் பொருட்களையும் வருவாயையும் தரும் தாவரங்கள் தான் பயனுள்ள தாவரங்கள் என்று எண்ணிக்கொள்கிறோம்.

அனைத்து தாவரங்களுமே பயனுள்ள அட்சயபாத்திரங்கள் என்பதை மறந்து விடுகின்றோம். நாம் வெட்டி வீழ்த்திய ஒவ்வொரு மரங்களுக்காகவும் வேதனைப்படுவோம்.அதற்கு பிராயச்சித்தமாக வீழ்த்திய ஒவ்வொரு மரங்களுக்கு பதிலாகவும் 9 மரங்கள்நட்டு வளர்ப்போம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

**அரிசி, சீனி, பருப்பு, பால்மா உட்பட 10 அத்தியாவசியப் பொருட்களை திறந்த கணக்குகள் மூலம் எதிர்வரும் மாதம் முதலாம் திகதி முதல் இறக்குமதி செய்ய அனுமதி வழங் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கு வழங்கப்படும் அனுமதி தொடர்பில் வர்த்தகத்துறை அமைச்சு அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.



இதேவேளை ஏற்கனவே, அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் போதுமான அளவு கையிருப்பில் வைத்திருக்குமாறும் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாத வாறு பார்த்துக்கொள்ளுமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன்மூலம் சில வர்த்தகர்கள் பொருட்களுக்கு தட்டுப்பாடு இருப்பதாகக் காட்டி விலையை அதிகரிக்க மேற்கொள்ளும் திட்டமிட்ட முயற்சிகளை தடுக்க முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார்.

அத்துடன், நியாயமற்ற விலையில் வர்த்தகம் செய்வதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறும் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# கடன் அட்டைகளுக்கான வட்டி விகிதம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள பல வணிக வங்கிகள் தமது கடன் அட்டைகளுக்கான வட்டி விகிதத்தை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் பல வணிக வங்கிகள் தமது கடன் அட்டைகளுக்கான வட்டி விகிதத்தை 30% ஆக அதிகரித்துள்ளன.

கடன் அட்டைகளுக்கான அதிகபட்ச வட்டி வீத வரம்பை நீக்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி தீர்மானித்தது.

இந்த தீர்மானத்தை தொடர்ந்து, கடன் அட்டை வட்டி விகிதம் 18% இலிருந்து 24% ஆகவும், தற்போது 30% ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை மத்திய வங்கியின் சமீபத்திய தரவுகளின்படி, இந்த ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் நாட்டில் செயலில் உள்ள கடன் அட்டைகளின் எண்ணிக்கை 1,973,481 ஆகும். (நி-6)

# அமெரிக்க உயர்மட்ட தூதுக்குழு இன்று இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

அமெரிக்க திறைசேரித் திணைக்களம் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்ட தூதுக் குழுவொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை வரவுள்ளது.

இக்குழுவினர் 29 ஆம் திகதி வரை இலங்கையில் இருந்து பல்வேறு சந்திப்புக்களில் பங்கேற்கவுள்ளனர்.

இத்தூதுக்குழுவில் ஆசியாவிற்கான பிரதி உதவித் திறைசேரிச் செயலாளர் றொபர்ட் கப்றொத் மற்றும் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான பிரதி உதவி இராஜாங்கச் செயலாளரான தூதுவர் கெல்லி கெய்டர்லிங் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். (நி-6)

# 200 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(ஜெனிவா)

இலங்கையில் தற்போது, சுமார் 200 அத்தியாவசிய மருந்துகளுக்கு பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.



அத்துடன், எதிர்வரும் 2 அல்லது 3 மாத காலப்பகுதியில் மேலும் 163 வகையான மருந்துகளுக்கு பற்றாக் குறை ஏற்படலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க 47.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபை உறுப்பு நாடுகளை கோரியுள்ளது. (நி-6)

# கடந்த மாதத்தில் மட்டும் 8 ஆயிரத்து 179 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் கடந்த மாதத்தில் 8 ஆயிரத்து 179 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

ஒரு மாதத்தில் பதிவான அதிகூடிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இதுவாகும் என அந்தப்பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் சுதத் சமர வீர தெரிவித்தார்.

இதனையடுத்து, இந்த வருடத்தில் 32 ஆயிரத்து 385 டெங்கு நோயாளர்கள் நாட்டில் இனங் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-6)


## ஜெயக்குமார் திருமண சேவை

1991 சூரிய செவ் லண்டன் மணமகளுக்கு பல்கலைக்கழகம் படித்த மணமகன் தேவை. உங்கள் தகுதிக்கு ஏற்ற மணமகன்/ மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

+49 176 43399372: 076 475 2219 (viber)
0094767338071 German Whatsapp
004917643399372
+49 176 43399372: 0765590349 (11962)

## சொர்க்கம் திருமண சேவை

1990 இல் பிறந்த அச்சுவினி 4ம் பாதம் கனடாவில் வசிக்கும் மணமகளுக்கு இலங்கையில் படித்த மணமகன் தேவை.

1983 இல் பிறந்த அனுச நட்சத்திரம் கனடாவில் வசிக்கும் விவாகரத்து ஆன மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.

1987 இல் பிறந்த கார்த்திகை நட்சத்திர (pharmacist Assistant) சூரியன் செவ்வாய் உள்ள மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு கொள்ள : சொர்க்கம் திருமண சேவை
001 416 666 ...
077 887 6969 (...)

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 2
கி.பா: சூரி 3 செவ் 4
தகைமை/தொழில்: A/L(தனியார் தொழில்)
உயரம்: 5'10"
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12771

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: 66 சூரி 10 செவ் 8 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: பொறியியலாளர் (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி ஆங்கில அறிவுள்ள பெண்
தொ.இ: B/12772

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா: சூரி, செவ் 6 இல்
உயரம்: 164 cm
தகைமை/தொழில்: MBBS வைத்தியர்
எதிர்பார்ப்பு : வைத்தியர் அல்லது பட்டதாரி
தொ.இ: B/12774

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம் : உத்தரட்டாதி 2
கி.பா: சூரி 2 செவ் 5 இல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: மானிபால் பல்கலைக் கழகம் (குவைத்) கணக்காளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/12781

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: 33 ½ சூரி 7 செவ் 3
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: படித்தவர்
தொ.இ:G/12779

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா: 47 சூரி 6 செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: BBM, MBA வங்கியாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/12780

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: விசாகம் 1
கி.பா: சூரி 4 செவ் 2 இல்
உயரம்: 152 cm
தகைமை/தொழில்: பொறியியல் பட்டதாரி Telecom Engineering இறுதி ஆண்டு மாணவி
எதிர்பார்ப்பு: படித்த ஆண்
தொ.இ:G/12782

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: சூரி 3 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc பட்டதாரி ஆசிரியை
எதிர்பார்ப்பு: அரச பட்டதாரி
தொ.இ:G/12784

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன்னார் இரட்டைக் கொலை
## கைதானோர் தொடர்ந்து மறியலில்

(மன்னார்)

மன்னார் - நொச்சிக்குளம் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றத்தில் குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்கள் மாத்திரம் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். ஏனைய 18 சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை.

தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக சந்தேக நபர்களை மன்றில் ஆஜர்படுத்த முடியாது போனதாக பொலிஸார் மன்றில் அறிவித்துள்ளனர். மேலும், சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபரை கைது செய்வதற்கான தேவை உள்ளதாக பொலிஸார் மன்றில் தெரிவித்துள்ளனர்.

விடயங்களை ஆராய்ந்த மன்னார் நீதிவான், சந்தேக நபர்கள் 20 பேரையும் எதிர்வரும் ஜூலை மாதம் 08 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (4-6-285)

# அக்கராயன் ஆற்றின் முதற்கட்ட துப்புரவுப் பணி நிறைவு



(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் ஆறு துப்புரவாக்கும் வேலைத் திட்டம் முதற்கட்டம் முடிவடைந்துள்ளதாக கிளிநொச்சிமேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.ரிஜியந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. அக்கராயன் விவசாயிகளின் முக்கிய கோரிக்கை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. அக்கராயன் குளத்தில் இருந்து மூன்று கிலோமீற்றர் வரையான ஆறு துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

மிகுதி நான்கு கிலோமீற்றர் வரையான ஆற்றினை குடமுருட்டி வரை துப்புரவு செய்வதற்கு மாவட்டச் செயலகத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவின் ஊடாக ரூபா.3.5 மில்லியன் நிதிக்கான திட்டங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

நிதி கிடைக்கும் நிலையில் அக்கராயன் ஆற்றினை முழுமையாக துப்புரவு செய்ய முடியும்.

தற்போது ஆறு துப்புரவு செய்யப்பட்டிருப்பதன் காரணமாக வயல் நிலங்களுக்குள் நீர் பரவுகின்ற நிலைமை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் குளத்தின் பெருமளவிலான வான் வெள்ளம் பாய்கின்ற போதும் ஆறு வழியாக வான் வெள்ளம் கடலினைச் சென்றடையக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அக்கராயன் ஆறு முழுமையாக துப்புரவு செய்யப்படும் போது பெருமளவு நன்மைகள் விவசாய முயற்சிகளுக்கு ஏற்படும் எனவும் தெரிவித்தார். (4-6-350)

### கிளிநொச்சி மாவட்டத்தில்
# சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத இரு வர்த்தக நிலையங்கள் முற்றுகை

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத இரு வர்த்தக நிலையங்கள் சுகாதார பரிசோதகர்களினால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் முன்வைத்த பல குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர். (4-6-316)

# முச்சக்கரவண்டிகளுக்கு எரிபொருளில் முன்னுரிமை
### சாவ.நகரசபை உறுப்பினர்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் பதிவிலுள்ள முச்சக்கர வண்டிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்குவதற்கான சிபாரிசினை மேற்கொள்ள வேண்டும் என நகரசபை உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே இவ்விடயம் தொடர்பாக உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தனர். இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

நகரசபையின் பதிவிலுள்ள முச்சக்கரவண்டிகளுக்கு வாராந்தம் 10 லீற்றர் என்ற அடிப்படையில் எரிபொருள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பாக நகரசபை பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்துடன் பேசித்தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டும் என மேலும் அவர்கள் தெரிவித்தனர். (4-6-30)

### பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி
# மருத்துவமனை ஊழியர்கள் மன்னாரில் போராட்டம்



(மன்னார்)

சுகாதார ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணியாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்தும் நேற்று சனிக்கிழமை காலை மன்னார் மாவட்ட பொது மருத்துவ ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். குறித்த போராட்டம் நேற்று காலை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு முன்பாக இடம்பெற்றது. (4-6-285)

# வவுனியாவில் விபத்து மூவர் படுகாயம்



(நெளுக்குளம்)

வவுனியா பறனட்டகல் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்த ஜீப் ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டினை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் வாகன சாரதி உட்பட மூவர் காயமடைந்துள்ளனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (4-6-299)



கண்டாவளை பிரதேச செயலகபிரிவிற்கு உட்பட்ட தருமபுரம் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் கீழ் இயங்கும் புதிய உதயம் முன்பள்ளி மாணவர்களுக்கான தூய பசும்பால் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் பிருந்தாகரனால் நேற்று முன்தினம் முன்பள்ளி மண்டபத்தில் வைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(படம் - தேவானந்தன்)

# சுகாதார பணிப்பாளர் மீது தாக்குதல் கிளிநொச்சியில் கண்டன போராட்டம்



([illegible])

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மீதான தாக்குதல் முயற்சியை கண்டித்து போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் காலை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் முன் ஆரம்பிக்கப்பட்டு மாவட்ட செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன் தினம் மாலை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மீது தனிநபர்களால் தாக்குதல் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. இதனை கண்டித்தே குறித்த போராட்டம் சுகாதார ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டது. (4-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.

*– சிம்மன்ஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வலம்புரியைக் காத்தருளும் அன்பு வாசகர்களுக்கு...

அன்பு வாசகர்களுக்கு முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

23 ஆண்டு கால வலம்புரியின் பயணம் சாதாரணமானதன்று. தமிழ் மக்கள் பட்ட அத்தனை துன்பங்களோடும் வலம்புரியின் பயணம் இரண்டறக் கலந்துள்ளது.

இருள்மயமான போர்க்காலச் சூழலிலும் உங்கள் கைகளைப் பற்றிக் கொண்டவாறு வலம்புரியின் பயணம் அமைந்தது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் தர்மத்தினின்றும் விலகலாகாது என்பதில் நாம் மிகவும் உறுதியாக இருக்கின்றோம்.

அதேநேரம் தனி மனிதர்களின் மனங்களை நோகடிப்பதோ அன்றி திட்டமிட்டு யாரையேனும் வஞ்சிப்பதையோ வலம்புரி ஒருபோதும் செய்யவில்லை.

அவ்வாறு செய்திருந்தால் அந்த கன்ம வினையை யாம் அனுபவித்தாக வேண்டும் என்ற கன்ம யோக தத்துவத்தையும் நாம் அறியாதவர்கள் அல்ல.

அதேநேரம் பொதுமக்களைப் பாதிக்கக் கூடிய விடயங்களைச் சுட்டிக்காட்டுவதில் வலம்புரி ஒருபோதும் பின்னின்றதில்லை.

பக்கச்சார்பு, செல்வாக்கு என்ற மாயைக்குள் வீழ்ந்துவிடாமல் நடுநிலை நின்று பத்திரிகைத் தர்மத்தைப் பாதுகாத்தாக வேண்டும் என்ற நம் கொள்கையால் சில அதிகாரிகள் மற்றும் சில அமைப்புகள், சில அரசியல்வாதிகளுக்கு வலம்புரி மீது ஆத்திரமும் கோபமும் ஏற்பட வாய்ப்புண்டு.

ஆனாலும் நாம் முன்வைத்த கருத்துக்களில் இருக்கக்கூடிய உண்மைத்தன்மைகளை நீதியோடு நின்று பார்த்தால் அதற்குள் இருக்கக்கூடிய மெய்மை உணரப்படும்.

உணர்தலே இன்றைய அவசிய தேவையாகும்.

அதனை ஏற்படுத்துவதில் உங்கள் வலம்புரி என்றும் நடுநிலை எனும் உயர்ந்த நன்னெறியோடு செயலாற்றும் என்பதை இவ்விடத்தில் சத்திய உறுதி செய்கின்றோம்.

தவிர, நீங்கள் வழங்கிவரும் பேராதரவால் வலம்புரி எங்கும் வியாபித்து நிற்கிறது.

அதேநேரம் சமகால பொருளாதார நெருக்கடியிலும் உங்கள் கைகள் வலம்புரியை இறுகப் பற்றி நிற்பதை பார்க்கும்போதெல்லாம் இறைவா! எல்லாம். உன் கருணை என்று மெய்தான் அரும்பி விதுர்விதுர்த்து கைதான் தலை வைத்து கண்ணீர் சொரிகிறது.

இந்த இடத்தில்தான் எரிபொருள் வழங்குவதில் வலம்புரியை வஞ்சிக்கின்ற செயற்பாட்டை நினைத்துப் பார்க்கின்றோம்.

ஒரு கை மக்களின் பிடியில் மறுகை கடவுளின் திருவடியில் எனும்போது வலம்புரிச் சங்கின் ஓசையை யாராலும் தடுக்க முடியாது.

# “தற்போதுதான் கப்பலில் ஏறியுள்ளேன் ஓரிரு நாட்களில் வேலையைக் காட்டுவேன்”

## புதிதாக பதவியேற்ற அமைச்சர் தம்மிக்க பெரேரா

(கொழும்பு)

“இலங்கையில் போர்க் காலத்திலேயே நாட்டுக்கு முதலீடுகளைக் கொண்டு வந்தவன் நான். எனவே, தற்போதைய சூழ்நிலையிலும் எனக்கு முதலீடுகளை உள்ளீர்க்க முடியும். அதனைச் செய்து காட்டுவேன்.”

இவ்வாறு சூளுரைத்துள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச முன்னிலையில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக நேற்று முன்தினம் பதவியேற்ற தம்மிக்க பெரேரா.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

“தற்போதுதான் கப்பலில் ஏறியுள்ளேன். இன்னும் ஓரிரு நாட்களில் எனது வேலையைக் காட்டுவேன். நாட்டுக்கு நிச்சயம் முதலீடுகளைக் கொண்டு வருவேன். அதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா, கண்டி மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளிலும் கடவுச்சீட்டை ஒரு நாளில் விநியோகிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்” என்றார்.

போர்க் காலத்தில் இவரே இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவராகச் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கட்டுநாயக்க ஊடாக நகைகளை கொண்டுவர முயன்ற பெண் கைது

(கொழும்பு)

சுமார் ஒரு கோடியே 10 இலட்சம் பெறுமதியான தங்க நகைகளை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டுவர முயன்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கப்பிரிவினரால் குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் பெண்ணொருவரே இவ்வாறு கைதாகியுள்ளார்.

டுபாயிலிருந்து நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த குறித்த பெண்ணிடம் இருந்து 650 கிராம் நிறையுடைய தங்க நகைகளை சுங்கப்பிரிவினர் மீட்டுள்ளனர். (ம-7)

## இலங்கையில் நாள் ஒன்றுக்கு 6 பேர் போதைக்கு அடிமையாகின்றனர்

(கொழும்பு)

இலங்கையில் நாள் ஒன்றில் ஆறு பேர் ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய புகையிலை மற்றும் மதுபானம் சார் அதிகார சபையின் தலைவர் டாக்டர் சமாதி ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நாட்டு மக்களின் புகைப் பழக்கம் 6 வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

இதேவேளை புகையிலை பயன்பாடும் 15 வீதத்திலிருந்து 13 வீதமாக குறைவடைந்துள்ளது என தெரிவித்துள்ளார்.

எனினும் ஹெரோயின், கஞ்சா போன்ற போதைப்பொருட்களின் பயன்பாடு வெகுவாக அதிகரித்துள்ளது” என மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சர்வதேச ஊடகங்கள் இலங்கையர்களுக்கு பாராட்டு

அவுஸ்திரேலியாவுக்கு நன்றி தெரிவிக்கும் சுலோகங்களை ஏந்தி இலங்கையர்கள் வெளிக்காட்டிய நன்றியுணர்வு சர்வதேசத்தின் பேசு பொருளாக மாறியுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணி நாட்டுக்கு வந்தமைக்கு இலங்கை அணி ரசிகர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலிய அணிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மஞ்சள் ஆடை அணிந்து, நேற்று முன்தினம் கிரிக்கெட் ரசிகர்கள் மைதானத்திற்கு சென்றிருந்தனர்.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடியிலும் இலங்கை மக்களின் நன்றியுணர்வை சர்வதேச ஊடகங்கள் பாராட்டி செய்தி வெளியிட்டுள்ளன. (ம-7)

## பொருளாதார நெருக்கடி தொடர்பில் கருத்தாடல் களம்


ஸ்ரீலங்காவின் பொருளாதார நெருக்கடியும் ஈழத் தமிழர்களின் எதிர்காலமும் எனும் தலைப்பிலான இணையவழிக் கருத்தாடல் களம் இன்று ஞாயிற்றுக்கிழமை(26.6.2022) இரவு 7 மணிக்கு நாடு கடந்த தமிழர் ஊடக மையத்தின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவரும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி கே.ரி.கணேசலிங்கம், மூத்த பத்திரிகையாளர் பாரதி இராஜநாயகம், ஊடகவியலாளர் அரியநாயகம் நிக்சன் ஆகியோர் கருத்துரைகள் நிகழ்த்துவர். கருத்துரைகளைத் தொடர்ந்து கலந்துரையாடலும்கேள்வி-பதிலும் இடம்பெறும்.

மேற்படி இணையவழிக் கருத்தாடல் நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் ID: 652 326 6168, PassWordCode: 122112 ஊடாக இணைந்து கொள்ள முடியும் எனவும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(ம-7,18)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

## பாவ வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைப்போம்



❖அநியாயங்கள் மூலம் சம்பாதித்து, 'நமது வாழ்க்கை நன்றாகத்தானே போய்க் கொண்டிருக்கிறது. எந்த இடையூறும் இல்லாமல் நாமும் நமது சந்ததியும் வாழ்வதற்கு எல்லாமே இருக்கிறதே' என்று நினைக்க வேண்டாம். ஏனென்றால், அப்படிப்பட்டவர்களும் மனம் திரும்பி விடமாட்டார்களா? என்று இறைவன் தனக்கே உரித்தான பொறுமையோடு காத்துக் கொண்டிருக்கிறார். மனசாட்சி குற்றப்படுத்தியும் அதைப் பொருட்படுத்தாமல், அநியாயம் மற்றும் பாவகறையில் உள்ள வாழ்க்கையில் பலர் நீடித்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இறைவன் தனக்கு அளித்துள்ள உறுதியான வாழ்க்கை என்று கூட பலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வாழ்வது சரிதான் என்ற கள்ளப் போதனைகளும் இப்போது பெருமளவில் போதிக்கப்பட்டு வருகின்றன.

❖ஆனால், பாவம் பெருகி உள்ள இடத்தில் கிருபையும் பெருகி இருப்பதால் தான் (ரோமர் 5:20,21). அப்படிப்பட்ட வாழ்க்கைக்காக உடனடியாக தண்டனை கிடைக்காமல் இருக்கிறது. ஆனால் எவ்வளவு கிருபை அளிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவிற்கு தண்டனையும் காத்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பாவம் செய்து வாழ்ந்தாலும், தொடர்ந்து நல்லபடியாக வாழ்க்கை செல்வது போல் காணப்படும் (பிர.8:11,12). ஆனால் அதன் முடிவு கடினமானது. நாம் எதிர்பாராத நேரத்தில் திடீரென்று நிலைமை மாறிவிடும். அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையின் முடிவு பற்றி 73-ம் சங்கீதம் விளக்குகிறது. எனவே உணர்வடைந்து பாவத்தில் தொடர்ந்து வாழ்வதற்கு முற்றுப்புள்ளி வைப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுமையான உணவுத் தட்டுப்பாட்டில் இருந்து எந்தவொரு நாடும் தப்பமுடியாது

## ஐ.நா. எச்சரிக்கை

(பெர்லின்)

**கடுமையான உணவுத் தட்டுப்பாட்டால் உலகம் பேரழிவை சந்திக்கும். அதன் பின்விளைவுகளில் இருந்து எந்த நாடும் தப்ப முடியாது என்று ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



ஜேர்மன் தலைநகர் பெர்லினில், பணக்கார மற்றும் வளரும் நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது.

அதில், ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் பேசியபோது,

பருவநிலை மாற்றம், கொரோனா ஆகியவை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு பட்டினி பிரச்சினையை உருவாக்கின.


அதனால் கோடிக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். உக்ரைன் போர், அந்த நிலைமையை மேலும் மோசமடைய செய்துள்ளது.

ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க நாடுகளில் உரம், எரிசக்தி விலை உயர்வை சமாளிக்க முடியாமல் விவசாயிகள் திண்டாடுகிறார்கள்.

அந்த நாடுகளில் அறுவடை பாதிக்கப்படும். அதனால், இந்த ஆண்டு பல நாடுகளில் பஞ்சம் அறிவிக்கப்படும் அபாயம் உள்ளது.

அடுத்த ஆண்டு நிலைமை இன்னும் மோசமடையும், உணவு கிடைக்காத பிரச்சினை, உலக அளவில் உணவுத்தட்டுப்பாடாக மாறும். அது உலக அளவில் பேரழிவை ஏற்படுத்தும். எந்த நாடும் அதன் சமூக, பொருளாதார பின்விளைவுகளில் இருந்து தப்ப முடியாது என அவர் எச்சரிக்கை விடுத்தார். (நி-6)

## ஆட்டோக்கு நுளம்பு வலை விரித்த இலங்கையர்



(கொழும்பு)

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலை காரணமாக பல்வேறு துறைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் இரவு பகலாக எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன்னே காத்து நிற்கின்றனர்.

இவ்வாறான நிலையில் கொழும்பின் புறநகர் பகுதியொன்றில் நள்ளிரவில் எரிபொருள் வரிசைக்காக காத்திருந்த ஆட்டோ சாரதியொருவர் தனது ஆட்டோ முழுவதையும் நுளம்பு வலை மூலமாக மூடி ஆட்டோக்குள் தூங்கும் காட்சி தற்போது சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது. (நி-6)

## கடந்த வாரம் மூடப்பட்ட பாடசாலைகள் மீண்டும் திறப்பு

(கொழும்பு)

கடந்த வாரம் மூடப்பட்ட பாடசாலைகள் செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய மூன்று நாட்களுக்கு மீண்டும் திறக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த நாட்களில் காலை 7.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை பாடசாலை கல்வி நடவடிக்கை இடம்பெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த பாடசாலைகளிலும் ஆரம்பப் பிரிவுகள் எத்தனை நாட்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் அந்தந்த பாடசாலை அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் கடந்த வாரம் போலவே அடுத்த வாரமும் இடம்பெறும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (நி-6)

## கால்நடைத் தீவன உற்பத்திக்கு அரிசி, நெல் பயன்படுத்தத் தடை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையின், தொடராக உடனடியாக அமுலாகும் வகையில் கால்நடை தீவன உற்பத்திக்காக அரிசி அல்லது நெல்லை விற்பனை செய்வதையோ அல்லது பயன்படுத்துவதையோ தடை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 240 | 300 |
| உருளைக்கிழங்கு | 230 | 280 | 250 | 300 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 | 600 |
| தக்காளி | 600 | 500 | 500 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 160 | 140 |
| கோவா | 340 | 300 | 320 | 350 |
| கரட் | 200 | 300 | 380 | 360 |
| பூசணி | 140 | 160 | 160 | 200 |
| புடோல் | 250 | 200 | 240 | 280 |
| வாழைக்காய் | 80 | 90 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 380 | 400 | 400 | 600 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 220 | 240 |
| பாகற்காய் | 600 | 400 | 500 | 800 |
| வெண்டக்காய் | 180 | 160 | 160 | 250 |
| கருணைக் கிழங்கு | 140 | 240 | 240 | 250 |
| பயற்றங்காய் | 200 | 200 | 240 | 250 |
| லீக்ஸ் | 250 | 220 | 280 | 300 |
| பீற்றூட் | 360 | 300 | 300 | 400 |
| கறிமிளகாய் | 400 | 400 | 320 | 500 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 600 | 600 |
| போஞ்சி | 600 | 550 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 250 | 280 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 80 | 80 |
| தேசிக்காய் | 500 | 350 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 80 | 50-70 |
| இராசவள்ளி | 160 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 | 600 |
| முள்ளங்கி | 150 | 200 | 240 | 200 |
| பொன்னாங்கண்ணி | 60 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 50 |
| ஈரப்பலா | — | 150 | 120 | 150 |

## ஹற்றன் எரிபொருள் நிலையம் முற்றுகையிட்டு போராட்டம்



(கொழும்பு)

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியை மறித்து நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த சில நாட்களாக தமக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்பதை வலியுறுத்தி அவர்கள் இந்த போராட்டத்தை முன்டுத்தனர்.

அத்துடன் அப்பகுதியிலுள்ள எரிபொருள் நிலையமொன்றும் மக்களால் முற்றுகையிடப்பட்டது. (நி-6)

## விவசாய அமைச்சின் அனைத்து ஊழியர்களினதும் விடுமுறைகள் ரத்து

(கொழும்பு)

விவசாய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து ஊழியர்களினதும் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி முதல் ஊழியர்களது விடுமுறைகள் இரத்துச் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிடம் இருந்து கிடைக்கப்பெறவுள்ள யூரியா உரத்தை வினைத்திறனான முறையில் விநியோகிப்பதற்காக இவ்வாறு விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்., கோப்பாய்...

நிரப்பு நிலையங்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உரித்தான கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையம், மற்றும் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் ஆகியன அத்தியாவசிய தேவைக்காக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 20 ஆம் திகதி 2285/04 இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய தேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் இந்த நடைமுறை அமுலுக்கு வருகிறது.

இனி வரும் நாட்களில் இந்த இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்களுக்கான எரிபொருள் விநியோகிக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,18,33)

## சர்வதேச உதவி...

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் பதவி விலகி, சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திடம் இருந்து நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது. அத்துடன் அரசாங்கத்திற்கு சர்வதேசத்தின் உதவியும் கிடைக்காது.

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் திருட்டு அரசாங்கம் என்பதை முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

இதற்குத் தீர்வாக கோட்டாபயவையும் ரணிலையும் அனுப்பி விட்டு, சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும். நாட்டில் நல்லாட்சி ராஜதந்திரத்தை ஏற்படுத்துவதற்காக சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் எனவும் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (ம-7)

## திங்கள் முதல்...

பாடசாலைக்குச் செல்லாது கஷ்டத்தை வெளிப்படுத்துவோம்.

இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியானது நாம் எவருமே இதுவரை சந்திக்காதது. இதனை ஒட்டுமொத்த நாட்டு மக்களும் அனுபவிக்கின்றனர் என்பது உண்மை.

இந்த வாழ்வாதாரப் போராட்டச் சூழ்நிலையில் மாணவரின் கல்விச் செயற்பாடுகளில் அக்கறை கொள்ளாத அரசாங்கம் பாடசாலைகளை நடாத்த முனைகின்றது. இது வேடிக்கையானது. பெற்றோரோடு மாணவரும் அவர்களோடு அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருமே இரவு பகலாக வீதிகளில் வரிசையில் நிற்கின்றனர். இவர்கள் வீதியில் நிற்க பாடசாலையை யாருக்காக நடாத்துவது?

திங்கட்கிழமை பாடசாலை இயங்கும் முறைபற்றி அரசாங்கம் அறிவித்துள்ளது. நகர்ப்புற பாடசாலைகள் மூன்று நாட்கள் இயங்குமாம். கிராமப்புற பாடசாலைகள் முழுநாளும் இயங்குமாம். இது ஏற்புடையதா?

கிராமப்புற பாடசாலைக்குச் செல்லும் பெருமளவான ஆசிரியர்கள் நகர்ப்புறங்களில் இருந்தே செல்கின்றனர். அவர்கள் எந்த மார்க்கத்தில் பாடசாலைக்குச் செல்வது? பொதுப் போக்குவரத்து பேருந்துகள் கூட அவர்களை ஏற்றிச்செல்ல மறுக்கின்றன.

தனியாகச் செல்வதற்கு எரிபொருள் இல்லை. இத்தகைய சூழ்நிலையில் எரிபொருள் தட்டுப்பாட்டைச் சீர்செய்யும் வரை பாடசாலைக்குச் சமுகமளிக்கமாட்டோம் என கல்வி அமைச்சிற்கும், செயலாளருக்கும் மாகாணங்களின் செயலாளர்கள், பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அனைவருக்கும் அறிவித்துள்ளோம். இதனை அவர்கள் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

ஆகையால் நாளை திங்கள் முதல் எரிபொருள் நிலைமை சீராகும்வரை பாடசாலைக்குச் செல்ல முடியாது என்பதனை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

இது நாட்டில் உள்ள அனைத்து அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அனைவருக்குமான பொதுவான நெருக்கடி என்பதால் எவருமே பாடசாலைக்குச் செல்லாது எமது கஷ்டத்தை முழுமையாக வெளிப்படுத்துவோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## பெற்றோல் விநி...

நிறுத்தப்பட்டுள்ள நிலையில் நேற்று நண்பகலுடன் [illegible] பெற்றோல் விநியோகமும் [illegible] நிறுத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. (ம-7)

## சில நாட்களுக்கு...

மற்றும் கச்சாய் எண்ணெய் ஏற்றுமதியை அடுத்தவார தொடக்கத்தில் அனுப்புவதற்கு வழங்குனர்கள் உடன்பட்டுள்ளனர். இதனை எனக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

கொடுக்கல் வாங்கல் காரணங்களுக்காகவே எரிபொருள் வழங்கல்களை சரியான நேரத்தில் நிறைவேற்ற முடியவில்லை.

அடுத்த ஏற்றுமதிகள் வரும் வரை, பொதுப் போக்குவரத்து, மின் உற்பத்தி மற்றும் தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வரையறுக்கப்பட்ட டீசல் மற்றும் பெற்றோல் அடுத்த வாரம் முழுவதும் வரையறுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும். இருப்பினும் ஏற்றுமதிகளின் வருகைக்கான திகதிகளை உறுதிப்படுத்த முடியவில்லை.

அடுத்த கச்சாய் எண்ணெய் ஏற்றுமதி கிடைக்கும் வரை சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலைய செயற்பாடுகள் தற்காலிகமாக மூடப்படும்.

புதிய மற்றும் ஏற்கனவே உள்ள அனைத்து விநியோகஸ்தர்களுடனும் நாங்கள் வேலை செய்கிறோம். தாமதம் மற்றும் சிரமத்திற்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என அவர் பதிவிட்டுள்ளார். (ம-7)

## சீரழிந்துள்ள...

பங்கேற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று மாலை 2.30 மணியளவில் குறித்த மாநாடு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும்பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

சீரழிந்த தாயகத்தைக் கட்டியெழுப்புகின்ற தீர்வு எனும் தலைப்பில் நடந்த மாநாட்டில் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய, ஜே.வி.பியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈபிஆர்எல்எப் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ. கே. சிவஞானம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் பல்வேறுபட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் தலைவர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,33)

## பொருளாதாரத்...

இச் சந்திப்பு அண்மையில் வெள்ளை மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கைக்கு அமெரிக்கா உதவிகளை வழங்கி வரும் நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகின்றது.

இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மகிந்த சமரசிங்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவின் திறைசேரியின் ஆசியாவுக்கான உதவி உப செயலாளர் ரொபேர்ட் கப்ரோத், தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி உப செயலாளரும், தூதுவருமான கெல்லி கெய்டெர்லிங் ஆகியோர் அடங்கிய குழுவினர் இலங்கை வருகை தரவுள்ளனர்.

இவ்வாறு இலங்கைக்கு வருகை தரும் அமெரிக்க குழு 26 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து உயர் மட்ட அதிகாரிகளை சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 25/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1275
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 0 2 4 8 1 6
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 3039
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 14 21 64 70
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 25/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1145
வெற்றி எழுத்து I
சுப்பர் இலக்கம் 18
வெற்றி இலக்கங்கள் 24 33 46 70

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 106
மிதுனம் 15 25 53 55 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/06/25
சீட்டிழுப்பு இலக்கம் 4797
ஆங்கில எழுத்து N
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 1 8 5 1 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.06.25
சீட்டிழுப்பு இலக்கம் - 827
X 49 52 74 80
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1598
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2022.06.25
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,176,040/-
வெற்றி இலக்கங்கள் 17 35 40 66
ஆங்கில எழுத்து I

சனிதா Shanida
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.06.25
சீட்டிழுப்பு இல: 3933
வர்ணம்: பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,826,480/-
வெற்றி இலக்கங்கள் 27 39 41 64
ஆங்கில எழுத்து W
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1772
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.06.25
தினம் சனிக்கிழமை
X 04 21 47 51
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,212,640/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,556,898.80
திகதி 2022-06-25
வெற்றி வாரம் 3484
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 29 47 57 60
மேஷம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,420,260/-

12
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 17 09 41 48 51
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 948
வர்ணம் சிவப்பு
திகதி 2022.06.25 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 244,625,335/-
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு முழு நாட்டையும் சுடுகாடாக்கியுள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

நடப்பு அரசாங்கம் நாட்டை தற்போது சுடுகாடு போன்ற ஒரு சோக மான நிலைக்கு கொண்டு வந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தொலைநோக்கற்ற திட்டங்கள் மூலம் முழு நாடும் அகதிகளாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் இருந்து மீண்டு வருவதற்கு ஜன நாயக, சுதந்திர மற்றும் வெளிப் படையான மக்கள் போராட்டமே சிறந்த வழி என சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

தற்போதைய ஆட்சியாளர் கள் நாட்டின் உண்மை நிலைவரத்தை உணர்ந்து மக்களுக்குச் சாதக மான வகையில் தமது வேலைத் திட்டங்களை மாற்றியமைக்க நினைத்தாலும் அது போல எதுவும் நடக்கவில்லை எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)


## யாழ்ப்பாணத்தில் உடனடி வேலை வாய்ப்பு

**RIB Group (Pvt) Ltd நிறுவனத்தில்**



- விற்பனை பிரதிநிதி (Sale Rep)
- கனரக சாரதிகள் தேவை (Heavy Vehicle License)
  - அனுபவம் அவசியம்
  - வயது (25-40)
  - சம்பளத்துடன் Sale + Collection Commission வழங்கப்படும்.

உரிய ஆவணங்களுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

திகதி : 29.06.2022

நேரம் : 11.00 am

தொடர்புகளுக்கு (11980)

இல.83, காதி ஆபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.

077 388 3879, 077 763 0214

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு
## Water Proofing

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- கட்டடங்களில் ஏற்படும் வெடிப்புக்களை உத்தரவாதத்துடன் சீர்செய்து கொள்ள இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பொருட்கள் மற்றும் கட்டடக் கம்பிகளில் ஏற்பட்ட துருப்பிடித்தலை அகற்றும் இரசாயனப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

உலகத்தரம்மிக்கது

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம்.

வட மாகாணத்தில் முதன் முதலில் அறிமுகம் செய்தவர்கள் (11978)

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

**North and East Engineering**
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000

## மணமகள் தேவை

வெளிநாட்டில் வசிக்கும் 27 வயது டாக்டர் (MBBS) மணமகனுக்கு அழகிய பட்டதாரி மணமகள் தேவை.

Viber / Whatsapp (11958)

0045 6067 5287

## வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

1 தச்சு வேலையாட்கள் 2 பெயின்ரர் (தளபாடம்)
3 கூலி வேலையாட்கள்

தொடர்பு:- ஆர்க் தளபாட நிலையம்
இல.35, கொடைக்காடு லேன்,
கோண்டாவில் கிழக்கு (பஸ் டிப்போ அருகாமை)
தொ.பே:- 021 221 9909, 077 300 1763 (11987)

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் துல்லியமாக கணித்து பெற்றுக்கொள்ளலாம்.

உள்நாடு, வெளிநாட்டுத் திருமணத் தொடர்புகளுக்கு
Wahlen STR - 143 - 4242
Laufen, Swiss
Tel : 0041768185443 | 0041615544242 (11983)

வெளிநாட்டு மணமகன்களுக்கு மணப் பெண்கள் தேவை.

தொடர்புகளுக்கு ( உரும்பிராய் )
076 835 1932 / 021 223 2222

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு மேசன், கூலியாள், கல் அறுக்கக் கூடியவர்கள் மற்றும் Spray Painting செய்யக்கூடிய பெயின்ரர் தேவை. (11989)

தொடர்புகளுக்கு
077 777 0969, 077 592 5371

## வான் விற்பனைக்கு

250- தொரிலக்கம்
Nissan Cerena வான்.
உடனடி விற்பனைக்கு (11981)

077 907 3761

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH
- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center. (11717)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழிச் சந்திக்கு அருகாமையில் 112 பரப்புக் காணி விற்பனைக்கு.

- A9 வீதியில் இருந்து 250 m தூரத்தில்
- நாவற்குழி சந்தியில் இருந்து 300 m தூரம்
- நல்ல இயற்கை சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 18 அடிப்பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை நான்கு இலட்சம் ரூபாய்
- பின் பகுதி காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் ரூபாய் (11973)

பார்வையிடும் நேரம்
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்பு:- 074 291 3726, 074 291 3727

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-4121)

V2 TRAVELS

எமது கிளைகள்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் A9 வீதி முகப்புடன் 27 பரப்புக் காணி விற்பனைக்கு.

- A9 வீதி முகப்பாக கொண்டது.
- 04 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- வர்த்தக நிலையங்கள், திருமண மண்டபங்கள், களஞ்சியசாலைகள், வாகன காட்சியறைகள் அமைக்க உகந்த பகுதி. (11973)
- நாவற்குழிச் சந்தியில் இருந்து 300 M தூரத்தில்

பார்வையிடும் நேரம்
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்பு:- 074 269 0854, 076 658 3621

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A9 வீதியில் இருந்து 50 m தூரத்தில் (இரண்டாவது காணி)
- நல்ல சூழல், நல்ல தண்ணீர் நிலம்
- 20 அடி பாதையுடன்
- கைதடிச் சந்தியில் இருந்து 300 m தூரத்தில்
- ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் ரூபாய் (300,000/=) (11973)

பார்வையிடும் நேரம்
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்பு:- 076 261 1282

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-4121)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.